உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 01 வெள்ளிக்கிழமை (15-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:201

குடிசன மதிப்பீட்டுப் பணிகள் குடாநாட்டில் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.குடாநாட்டில் சனத்தொகைக் கணக்கெடுப்புத் தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

பிரதேச செயலகங்கள் மற்றும் யாழ்.செயலகம் ஆகியவற்றில் சனத்தொகைக் கணக்கெடுப்புத் தொடர்பாக நேற்று நடைபெறவிருந்த பயிற்சி வகுப்புகள் அனைத்தும் இரத்துச் செய்யபபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. -

மேற்படி வகுப்புகளில் கலந்து கொளவதற்குச் சென்ற கிராம சேவகர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மறு அறிவித்தல் வரை - தற்காலிகமாக - மேற்படி வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக உரிய அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது.

குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளிலோ அல்லது அது தொடர்பான

(12 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருப்பது குறித்து படைத்தரப்பு கவலை

கொழும்பு,ஜூன்15

விடுதலைப் புலிகள் அதி நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதாக இராணுவத் தரப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

புலிகள் அதிநவீன ஆயுதங்களைப பயன்படுத்துவதால் அதிக உயரத்தில் பறப்பது உட்பட உச்சக் கட்ட பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைப் பேணுமாறு தனது விமானிகளுக்கு படைத்தரப்பு எச்சரித்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி வில்பத்துக் காட்டின் மீது 50 இராணுவத்தினருடன் பறந்து கொண்டிருந்த விமானப் படையின் ஏ.என்.32 ரக விமானத்தை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணை ஒன்று இலக்குத் தவறி வெடித்ததையடுத்து, விமானங்கள் மீதான தாக்குதல் குறித்து படைத்தரப்பில் புதிய அபாயம் தொடர்பான கவலைகள் தோன்றியிருந்தன.

குடாநாட்டில் உள்ள முப்பதாயிரம் படையினருக்கும் தேவையான விநியோகம் மற்றும் போக்குவரத்தை மேற்கொள்ளும் விமான மார்க்கத்துக்கு விடுதலைப் புலிகளின் நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் பலத்த அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல், விமானப்படை விமானங்கள் புலிகளின் நிலைகளின் மீது தாக்குதல்களை நடத்திய போது விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், தரை வெளித் தாக்கு ஏவுகணைகள் ஆகியவற்றையே உபயோகித்து எதிர்த் தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

ஆனால் இப்போது முதல்தடவையாக - கடந்த 7 ஆம் திகதி - நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அவர்களிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பது தெரியவந்துள்ளதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

தடையை நீக்குவது குறித்து அமைச்சரவை நேற்று ஆராய்வு

பேச்சை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் முடிவு

கொழும்பு,ஜூன்15

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுக் கூடிய ஸ்ரீலங்கா அமைச்சரவை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாணும் முன் முயற்சி நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டுமா என்பது குறித்து விரிவாக ஆராய்ந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் முழுமூச்சாக ஈடுபடுவதென அமைச்சரவை தீர்மானித்ததாகவும் தெரியவந்தது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் -

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்தும் - விரிவாக ஆராயப்பட்டன.

தேவையானால் புலிகள் மீதான தடையைத் தற்காலிகமாக நீக்கலாம எனச் சில அமைச்சர்களும் -

தடையை முழுமையாக நீக்கிப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று வேறு சில அமைச்சர்களும் -

கருத்துக் கூறியதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இந்த விடயத்தில் எந்த வித இறுதித் தீர்மானமும் எடுக்கப்படாத நிலையில் அமைச்சரவைக் கூட்டம் முடிவுற்றதாகவும் அவர் சொன்னார்.

சமாதானப் பேச்சுக்களை நடத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

கப்பல் சேவை இன்று நடக்கும் என அறிவிப்பு

நேற்றும் பயணிகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்வதற்காகக் கடந்த செவ்வாயன்று கப்பலில் ஏறி, காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியே ஒரு முழு நாளையும் கழித்துவிட்டு நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம் திரும்பிய பயணிகள் நேற்றும் தெல்லிப்பழை வரை கூட்டிச் செல்லப்பட்டு பயணத்தை மேற்கொண்டு தொடர முடியாத நிலையில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

செவ்வாய் புறப்படவிருந்து பின்னர் காலநிலை சீரின்மையால் ஒத்தி வைக்கப்பட்ட இக்கப்பல் சேவை, நேற்று மீண்டும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதை நம்பி வந்த பயணிகளே

(12 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தை நிறுத்தி பேச்சை நடத்துக!

யாழ். ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

"தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்" என்று யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் நெதர்லாந்து தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரகத்தின் முதலாவது செயலாளர் அனக்கி எம். ஸ்வெற்றர், இரண்டாவது செயலாளர் டொறின் ஈவன் நெறீன் ஆகியோர் நேற்று யாழ். ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்தனர்.

அங்கு சமாதானத்துக்கும் நல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

தடையை நீக்க அரசு இணக்கம்?

கொழும்பு,ஜூன்15

சமாதானப் பேச்சுக்கான முன் முயற்சியாக விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு ஸ்ரீலங்கா தீர்மானித்துள்ளது என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி லண்டனில் இருந்து ஒலிபரப்பப்படும் தமிழ் ஒலிபரப்பு நிலையம் நேற்று செய்தி வெளியிட்டது.

தடைநீக்கம் குறித்து அரசு சார்புச் செய்தி ஊடகங்களில் வெளியாகி வருகின்ற சாதகமான தகவல்கள் தொடர்பாக அமைச்சர் ஒருவரிடம் கேட்டபோதே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசு தயாராகியுள்ளது எனவும் -

அண்மையில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுக்களின் போது அரசின் இந்த நிலைப்பாடு குறித்து ஜனாதிபதி அவரிடம் விளக்கினார் எனவும் அந்த அமைச்சர் குறிப்பிட்டார்.

புலிகள் மீதான தடையை நிபந்தனைகளின் அடிப்படையில் நீக்குவதற்கு அரசு தயாராகவுள்ளதாகவும்-

(12 ஆம் பக்கம் பார்க்க)

டாக்டர்களின் வேலைநிறுத்தம் குறித்து இன்று சுகாதார அமைச்சில் மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன்15

வடக்கு - கிழக்கில் டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்குக் காரணமாக இருக்கும் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கும் வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக உயர் மட்ட மாநாடு ஒன்று இன்று கொழும்பில் சுகாதார அமைச்சில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கில் இயங்கும் மருத்துவச் சங்கங்களின் கிளைகளில் இருந்து 12 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர்.

இந்த விவகாரம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தாகவும் -

இந்த மாநாட்டில் பங்குபற்றும் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளைப் பிரதிநிதிகள் இருவரை இந்த மாநாட்டில் பங்கு பற்றுவதற்காகக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் தமது கட்சியே செய்ததாகவும் -

ஈ.பி.டி.பி வட்டாரங்கள் தெரிவித்தன.

சுகாதார அமைச்சரும் அவரது அமைச்சின் உயரதிகாரிகளும் இன்றைய மாநாட்டில் கலந்துகொள்வர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

பிந்துனுவெவ படுகொலைகளை 'ட்ரயல் அற் பார்' விசாரிக்கும்

கொழும்பு,ஜூன்15

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் 29 தமிழ்க் கைதிகள் வெட்டிப் படுகொலை செய்தமை தொடர்பான வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரைக் கொண்ட 'ட்ரயல் அற் பார்' நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்பட வேண்டும் என்று சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் மேற்படி விடயம் தொடர்பாக மனு ஒன்றை பிரதம நீதியரசரிடம் சமர்ப்பித்துள்ளார். ஜூரர்கள் இல்லாத நிலையில் மூன்று மேல்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றத்தில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். குடாக்கடலில் நேற்று மீனவர் மீது துப்பாக்கிச்சூடு!

யாழ்ப்பாணம்,ஜூன்15

குடாக்கடலில் கல்முனைக்குச் சமீபமாக நேற்று காலை 10 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குருநகர் மீனவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஜேக்கப் ஜோன் ஜென்சி (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார்.

கல்முனைக்குச் சமீபமாக இவர் மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே அவர் காயமடைந்தார் எனப் படைத்தரப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

கிழக்குப் பல்கலைக்குள் படையினர் புகுந்து தேடுதல்!

கொழும்பு,ஜூன்15

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம் நேற்றுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. அப்போது பல்கலைக்கழகத்தில் இருந்து ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனப் படைத்தரப்பில் கூறப்பட்டது. ஆனால் பல்கலைக்கழக ஊழியர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் கூறுவதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

இச்சம்பவம் குறித்து அரசின் விசேட ஊடகத் தகவல் மையம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆயர் இல்லத்துக்கு நேற்றுக் காலை சென்ற நெதர்லாந்து தூதுக்குழுவினர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மற்றும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர். அவர்கள் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்புப் பிரதிநிதிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்ப்பாணம் வந்துள்ள நெதர்லாந்து தூதுக்குழுவினர் யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகளை நேற்றுக்காலை சந்தித்த சமயம் எடுக்கப்பட்ட படம்.

நெதர்லாந்து தூதரக செயலாளர் அனிக்கே எம் ஸ்வெற்றர், இரண்டாவது செயலாளர் டொரின் ஈவான் நொறிஸ் ஆகியோரை முதலாவது படத்திலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை ஏனைய படங்களிலும் காணலாம். (படங்கள்:- றோய் மதிவதனன்)

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் டாக்டர்கள் விடயத்தில்

இனப்பாகுபாடு இல்லை என்று கூறும் அமைச்சரின் கருத்துக்குக் கண்டனம்

அரச மருத்துவர் சங்கக் கிளை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்15

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மருத்துவர்களுக்கான கொடுப்பனவு என்பது ஓர் இனப்பாகுபாடான நடவடிக்கை அல்ல என்றும், இந்த நடவடிக்கையால் தமிழ் பேசும் அதிகாரிகளும் பயன்பெற்றுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்தை வன்மையாக மறுப்பதாக அரச மருத்துவர் சங்க யாழ்.கிளை தெரிவித்துள்ளது.

நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இக்கொடுப்பனவு இங்கு பணியாறறும் எல்லாச் சிங்கள மருத்துவர்களுக்கும், ஒரு சில தமிழ் பேசும் மருத்துவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. நிலைமை இவ்வாறிருக்க ஒரு சில தமிழ் பேசும் மருந்துவர்கள் பலனடைவதைக் காட்டி இனப் பாரபட்சம் காட்டப்படவில்லை என்று கூறுவது முழுப் பூசனிக்காயைச் சோறறில் மறைப்பதற்கு ஒப்பாகும்.

அத்தோடு வடக்கு - கிழக்கில் பணியாற்றுவதற்கு மருத்துவர்கள் மறுப்பதால்தான் இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டி ஏற்பட்டதெனக் கூறும் அமைச்சர் இதே சலுகைகளை சகல மருத்துவர்களுக்கும் பாகுபாடின்றி முன்பே வழங்கியிருந்தால் மேலும் பல - வடக்கு கிழக்கைச் சேர்ந்த - மருத்துவர்கள் இங்கு சேவையாற்ற விரும்பியிருக்கக் கூடும். இதனால் அரசு தென்னிலங்கை மருத்துவர்களை வடக்கு கிழக்கில் பணியாற்ற நிர்ப்பந்தித்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

மாறாக விசேட சலுகைகளுடன் மருத்துவர்களை நிர்ப்பந்தமாக வடக்கு - கிழக்கிற்கு அனுப்புவது இங்கு எந்த சலுகைகளையும் எதிர்பாராது கடமையாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களை அவமதிப்பது போன்ற செயலாகும். இது இவர்களைக் கூட இங்கிருந்து வெளியேறும் படி தூண்டலாம். இதனால் வடக்கு - கிழக்கு மருத்துவ சேவை நிர்ப்பந்தத்தின் பேரில் தென்னிலங்கையில் இருந்து வரும் வைத்தியர்களை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய ஏதுநிலை உருவாகும்.

ஆனால் இவ்வாறு வரும் மருத்துவர்கள் வடக்கு - கிழக்கில் ஏற்படும் அனர்த்தங்களின் போதோ, யுத்த நிலைமை தீவிரமடையும் போதோ, இங்கு தொடர்ந்து கடமையாற்றுவாரென எந்தவித உத்தரவாதத்தையும் தரவில்லை. இந்நிலையில் கடந்த காலங்களைப் போன்று அவர்கள் வடக்கு கிழக்கை விட்டு வெளியேறுவார்களானால் இங்கு வாழும் மக்களுக்குரிய சுகாதார சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடையும் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் கடந்த வருட ஆரம்பத்தில் யுத்தம் தீவிரமடைந்த போது தென்னிலங்கை மருத்துவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். அந்நிலையில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மருத்துவர்களினால் மாத்திரமே யாழ்.மருத்துவ சேவை உயிர்த்துடிப்புடன் பேணப்பட்டது.

எனவே அரசு போலியான நியாயங்களைக் கற்பித்து எமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை மறுப்பது மிகவும் கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியதுமாகும். எனவே எமது நியாயமான கோரிக்கையை உடனடியாக ஏற்று மக்களது துன்பங்களை தவிர்க்குமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

எவ்வித சலுகைகளையும் எதிர்பாராது இங்கு கடமையாற்றும் எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக நாங்கள் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்ட இப்போராட்டத்தினால் மக்களுக்கு ஏற்பட இருக்கும் துன்பங்களுக்கு நாங்கள் எங்களுடைய மன வருத்தத்தை மீண்டும் மீண்டும் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது.

(உ-3)

மருத்துவ மாணவரும் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்15

வடக்கு - கிழக்கில் வைத்தியர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆதரித்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரே தேசம், ஒரே மக்கள், இனப் பாகுபாடின்மை என்றெல்லாம் அற்புதமான பிரசாரங்கள் செய்துவரும் அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை வெட்ட வெளிச்சமாக்கும் இன்னொரு வடிவம்தான் வடக்கு கிழக்கு வைத்தியர்களின் கொடுப்பனவு தொடர்பான பாரபட்சமாகும்.

ஏனைய பிரதேசங்களில் கடமையாற்றும் வைத்தியர்களை விட வடக்குக் கிழக்கு வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பன்முனையானவை.

- போதிய ஆளணியினர் இன்மையால் அதிகபட்ச வேலைப்பளு.
- போதிய மருந்துகள், உபகரணங்கள் குறித்த வேளைகளில் பெற முடியாததால் ஏற்படும் நெருக்கடி.
- தொடரும் போர்ச் சூழலால் நிரந்தர அச்சுறுத்தலின் கீழ் வாழ வேண்டிய நிலை.

இவை அனைத்துமே அரசின் பாராமுகத்தாலும் பாரபட்சத் தன்மையினாலும் எழுந்த பிரச்சினைகளாகும். இவை தொடர்பான எந்த ஒரு கோரிக்கைக்குமே அரசாங்கம் இன்றுவரை செவிசாய்க்கவில்லை. மாறாக ஏனைய இடங்களில் ஆளணிக் குவிப்பு, நவன உபகரண மருத்துவ வசதிகள், நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கிருந்து வடக்கு - கிழக்குக்குக் கடமை புரிய வருபவர்களுக்கு மேலதிக சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இந் நடவடிக்கை மூலம் அரசு எதை வெளிப்படுத்துகிறது? வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் இத்தகைய இடைஞ்சல்களுக்கென்றே சபிக்கப்பட்டவர்கள். அவர்கள் எந்த விசேட கவனத்துக்குமுரியவர்கள் அல்லர் என்பதே அரசின் நிலைப்பாடு. இது அப்பட்டமான இனவாதமாகும்.

அதேவேளை மருத்துவ மாணவர்களாகிய நாம் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை, வைத்திய உபகரணங்களின் பற்றாக்குறை போன்றவற்றால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறோம். இதற்கான எமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இதுவரை எவ்வித ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக இங்குள்ள வைத்தியர்களினது கொடுப்பனவில் வெளிப்படையான பாரபட்சத் தன்மையுடன் நடந்து கொள்கிறது. இதற்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

சொந்த விருப்பங்களைக் கருதி யாரும் இவ்வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவில்லை. மாறாகச் சூழ் நிலைகளே வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தூண்டியுள்ளன. தவிர்க்க முடியாத பன்முகக் காரணங்களிற்காகவே இப் போராட்டம் நிகழ்த்தப் படுவதால் மக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு நாமும் மனம் வருந்துகின்றோம்.

வைத்தியர்களின் இப் போராட்டத்திற்கான தகுந்த பதில் வழங்கப் படாதவிடத்து அதில் நாமும் எமது பங்களிப்பை மேற்கொள்ளுவோம் என்பதை அரசாங்கத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(உ-3)

அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்15

பிரபல கல்விமானும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான அமரர் பேராசிரியர் அ.துரைராஜாவின் 7 ஆவது ஆண்டு நினைவு தின அஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்பல்கலைக் கழக விவசாய பீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விவசாய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் விவசாயபீடப் பதில் பீடாதிபதி பேராசிரியர் அ.நவரட்ணராஜா நினைவுச் சுடரை ஏற்றுவார். அதன் பின்னர் நினைவுரைகள் இடம்பெறும். (உ-3)

J/101/ நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கம்

வருடாந்த பரிசளிப்பு விழா - 2001

காலம்:- நாளை (2001.06.16) சனிக்கிழமை முற்பகல் 9.30 (புதிய நேரம்)
இடம்:- யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
தலைவர்:- திரு.கை.சீவரத்தினம் அவர்கள் (நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கம்)
ஆசியுரை:- சிவபிரம்ம ஸ்ரீ.நா.பாலசுப்பிரமணிய குருக்கள் அவர்கள் (கொண்டலடி விநாயக பிரதம குருக்கள்)
வண.பிதா ஜோன் பிற்றர் துரைரெட்ணம் அவர்கள்
பிரதம விருந்தினர்:- திருவாளர் சி.வேல்முருகோனபிள்ளை அவர்கள் (பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், நல்லூர்)
சிறப்பு விருந்தினர்கள்:- திரு.வே.ஞானகாந்தன் (அதிபர், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)
திரு.அ.நிர்மலன் அவர்கள் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்)
திரு.இ.ஓங்காரமூர்த்த அவர்கள் (உப அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)

o பரிசில் வழங்குதல் o

பிரதம விருந்தினர் அவர்கள் பண்ணிசை விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு.

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்: திரு.சு.கிருஸ்ணராஜா
தலைமையுரை:
வரவேற்புரை: செ.ஸ்ரீ நாகேஸ்வரன் (பொருளாளர், கிராம அபிவிருத்திச் சங்கம்)
சிறப்பு விருந்தினர் உரை:
பண்ணிசைகள்: சகல பரிவிலும் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள்
பிரதம விருந்தினர் உரை:
பரிசில்கள் வழங்கல்: பிரதம விருந்தினர் அவர்கள்
நன்றியுரை: திரு.அ.இரவிந்திரதாசன (செயலாளர், நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,
நீராவியடி.

(C/17106)

மரண அறிவித்தல்கள்

திருமதி இலட்சுமி கந்தையா

நீர்வேலி இராச வீதியைச் சேர்ந்த திருமதி இலட்சுமி கந்தையா நேற்று (14.06.2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரவேலு, திருமதி இராசம்மா தம்பிராசா, மார்க்கண்டு, திருமதி பரஞ்சோதி வேலுப்பிள்ளை, திருமதி இராசாங்கம் தம்பிராசா, தேவராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கனகம்மா, தம்பிராசா, திருமதி சிவபாக்கியம், த.வேலுப்பிள்ளை (பிரசித்த நொத்தாரிசு), தம்பிராசா, திருமதி குணபூஷணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி உருத்தினேஸ்வரி பாலச்சந்திரன் (கனடா), உருத்தினேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2001) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

'இராஜகிரி',
இராச வீதி,
நீர்வேலி.

தகவல்:
க.தேவராஜா (தேவர்)
(மகன்)

(C/17107)

சிவசுப்பிரமணியம் சிவஞானம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவஞானம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 13-06-2001 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிவசுப்பிரமணியத்தின் மகனும் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி முத்துக்கிருஷ்ணரின் மருமகனும் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், இராமநாதன், நகுலேஸ்வரி, செந்தில்நாதன், ஏகாம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோரஞ்சிதத்தின் மாமனாரும் ஆதித்தியா, திவாகரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 14-06-2001 அன்று பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
மனைவி

(C/17108)

எல்லைப் பிரச்சினை குறித்து ஆராய இந்திய - பாங்களாதேஷ் கூட்டுக்குழு

இரு நாள் மாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி,ஜூன்15

இந்தியாவும் பங்களாதேஷும் தமக்கிடையிலான எல்லைப் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கென இரு நாடுகளையும் சேர்ந்த கூட்டுக் குழு ஒன்றை நியமித்துள்ளன.

எல்லைப் பிரச்சினை குறித்து புதுடில்லியில் இடம்பெற்ற 2 நாள் மாநாட்டின் இறுதியில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இரு நாடுகளும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக்கள் ஆக்கபூர்வமாகவும் சுமுகமாகவும் இடம்பெற்றதாக இந்திய அதிகாரிகள் தெரிவிதனர். தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் சுமார் 4ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான எல்லைப் பிரதேசம் உண்டு. இதில் 6.5 கிலோ மீற்றர் நீள எல்லைப்பிரதேசத்தில் இதுவரை கட்டுப்பாட்டு எல்லைக் கோடு வகுக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியில் எல்லை குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் நிலவி வந்தன. தமது பிரதேசத்தினுள் மற்றைய நாட்டுப் படைகள் ஊடுருவியதாக இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொள்வது வழமை.

தற்போது இந்தப் பகுதியில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை நிரந்தரமாக வகுப்பது தொடர்பாகவே இரு நாட்டு அதிகாரிகளும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர். (ம-9)

நெரிசலை சமாளிக்கத் தினறும் ஹீத்ரோ விமான நிலையம்!

லண்டன்,ஜூன்15

தென்கிழக்குப் பிரிட்டனில் அமைந்துள்ள ஹீத்ரோ விமான நிலையத்தில் விமானங்களின் நெரிசல் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நெரிசல் காரணமாக அண்மையில் இந்த விமான நிலையத்தில் இரு விமானங்களுக்கிடையில் இடம்பெறவிருந்த பெரும் விபத்து கடைசி நிமிடத்தில் தவிர்க்கப்பட்டது.

பறப்பை ஆரம்பிப்பதற்குத் தயாராக ஓடு பாதையில் பிரிட்டிஷ் 'மிட்லாண்ட்

நெரிசல் மிகுந்த ஹீத்ரோ விமான நிலையம்

ஜெட்' நிறுத்தப்பட்டிருந்தது. அதே ஓடுபாதையில் பிரிட்டிஷ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான 'போயிங் 747 ஜம்போ ஜெட்' தரையிறங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. 'ஜம்போ ஜெட்' தரையிறங்கி ஓடுவதற்கு ஓடுபாதையின் அளவு போதுமானதாக இல்லாத நிலையிலும் கூட இட நெருக்கடி காரணமாக அந்த ஓடு தளத்தில் தரையிறங்க விமானத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

தரையிறங்க முற்பட்ட 'ஜம்போ ஜெட்' ஓடு தளத்தில் நின்றிருந்த 'மிட்லாண்ட் ஜெட்'டுடன் மோத இருந்தது. எனினும் 'மிட்லாண்ட் ஜெட்டின்' கட்டுப்பாட்டாளரின் சமயோசித நடவடிக்கையால் இந்த விபத்து மயிரிழையில் தவிர்க்கப்பட்டது. விபத்தைத் தவிர்ப்பதற்காக 'ஜம்போ ஜெட்' ஓடுபாதையிலிருந்து மீண்டும் மேலெழுந்தது. அச்சமயத்தில் 'மிட்லண்ட் ஜெட்'டின் வால் பகுதிக்கும் 'ஜம்போ ஜெட்'டின் முனைப்பகுதிக்கும் இடையில் 112 அடி இடை வெளியே இருந்தது. (ம)

இந்தியக் கரைக்கு அப்பால்

எண்ணெய்த் தாங்கிக் கப்பல் வெடித்துச் சிதறி மூழ்கியது!

புதுடில்லி,ஜூன்15

இந்தியாவின் மேற்குக் கரை நகரமான பெங்களூரில் இருந்து 740 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்த சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்று வெடித்துச் சிதறி கடலில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எம்.வி.எஸன்ஸ் என்ற இந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பல் கடலில் மூழ்கும் போது அதில் 42 பணியாளர்கள் இருந்ததாகவும் -

அவர்களில் 32 பேர் இன்னொரு கப்பல் மூலம் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

கப்பல் வெடித்த சமயம் காணாமற்போன 4 பணியாளர்களைத் தேடும் பணியில் இந்திய கரையோரக் காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் இருவர் கப்பல் வெடித்த சமயம் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. கப்பல் வெடித்ததற்கான காரணம் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

விபத்து இடம்பெற்ற சமயம் கப்பலில் எண்ணெய் ஏற்றப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-9)

உடன்படிக்கை ஏற்பட்டதை அடுத்து

மத்திய கிழக்கில் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதாக இஸ்ரேல் அறிவிப்பு

ஜெருசலேம்,ஜூன்15

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் இயக்குநர் ஜோர்ஜ் ரெனட் ஏற்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையின்படி சண்டை நிறுத்தத்தை தான் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் மீதான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடைமுறையைத் தளர்த்துமாறும்-

பலஸ்தீனப் பிரதேசத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க வேண்டாம் என்றும் -

தமது படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஜோர்ஜ் ரெனட்டின் உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பலஸ்தீனத் தீவிரவாதிகளைக் கைது செய்வதற்கு யஸீர் அரபாத் சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து இஸ்ரேல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (ம-9)

புதிய பாதுகாப்புத் திட்டம் உலகிற்கு அவசியம் தேவை

நேட்டோவில் அமெரிக்க அதிபர் புஷ் உரை

பிரஸல்ஸ்,ஜூன்15

இன்றைய காலகட்டத்தில் உலகிற்கு புதிய பாதுகாப்புத் திட்டங்கள் அவசியம் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜோர்ஜ் புஷ் நேட்டோ பொதுக்கூட்டத்தில் பேசும்போதே இதனைத் தெரிவித்தார். அமெரிக்காவின் ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்துக்கு ஆதரவு கோரி அவர் அங்கு உரையாற்றினார்.

அத்திட்டத்துக்கு சர்வதேச ஒத்துழைப்பை பெறுவது புஷ்ஷின் முக்கிய நோக்கம். சில நாடுகளின் தலைவாகள் அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். பலர் இத்திட்டம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் ஏவுகணை எதிர்புத் திட்டம் செயற்படுத்தமுடியாத ஒன்று என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

புஷ் தனது ஐரோப்பிய விஜயத்தின் அடுத்த கட்டமாக சுவீடன் செல்லவுள்ளார். அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்பு இதுவே முதற்றடவையாக சுவீடனுக்குச் செல்கிறார். புஷ்ஷின் வருகைக்காக சுவீடனின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியங்களின் பொதுக்கூட்டத்திலும் ஜோர்ஜ் புஷ் கலந்துகொள்வார்.

இதில் சூழல் பாதுகாப்பு, வர்த்தகம், மத்திய கிழக்குப் பிரச்சினை முதலானவை பற்றிப் பேசப்படும். இவற்றில் அமெரிக்காவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் முரண்பாடான கருத்துக்கள் உள்ளன.

ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் ஐரோப்பிய விஜயம் ஐந்து நாள்களில் முடியும். ஐந்தாம் நாள் அவர் ரஷ்யா செல்வார்.

இவ்விஜயத்தின் முக்கிய நிகழ்வு இது எனக் கூறப்படுகிறது. அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் முரணான கருத்துக்கள் பல உள்ளன. அவை தொடர்பாக என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை பலர் எதிர்பார்க்கிறார்கள். (ம)

16 வயதுச் சிறுவர்கள் படையில்; பிரிட்டனுக்கு ஐ.நா. கண்டனம்!

நியூயோர்க்,ஜூன்15

சிறுவர்களைப் படையில் சேர்ப்பது குறித்து பிரிட்டனை ஐ.நா. கடுமையாக விமர்சித்துள்ளது.

சிறுவர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே பிரிட்டன் குறித்த தனது விமர்சனதை ஐ.நா.குறிப்பிட்டுள்ளது.

16 வயதுச் சிறுவர்களை இப்போதும் படையில் சேர்க்கும் ஒரேயொரு ஐரோப்பிய நாடு பிரிட்டனே ஆகும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்டவர்களை படைக்குச் சேர்க்கும் நாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் -

யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவது மட்டுமன்றி, பாலியல் துன்புறுத்தல்கள் உட்பட சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் ஆபிரிக்க, ஆசிய நாடுகளிலேயே அதிகம் காணப்படுவதாகவும் -

ஐநா தனது அறிக்கையில் தெரிவித்தது.

உலகெங்கிலும் மூன்று லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் ஆயுதக் குழுக்களில் சேர்க்கப்பட்டு, அரசுப் படைகளுடன் போரிட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

உலக அரங்கில்

கராச்சியில் குண்டு வெடிப்பு

இஸ்லாமபாத்,ஜூன்15

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று முன்தினம் இரவு 4 குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இக்குண்டுவெடிப்பில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார்; மேலும் 14 பேர் காயமடைந்தனர்.

பாக். தூதுக் குழு புதுடில்லியில்

காஷ்மீர் பிரச்சினை தொடர்பான பேச்சில் கலந்துகொள்வதற்காக, அடுத்த மாதம் இந்திய வரவுள்ள பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்பின் விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்கு பாக்கிஸ்தானிய உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று புதுடில்லி சென்றுள்ளது.

தாய்வானில் நிலநடுக்கம்

தாய்பேய்,ஜூன்15

தாய்வானில் நேற்று அதிகாலை 6.3 ரிச்சடர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

1999ஆம் ஆண்டு இதேபோன்று இடம்பெற்ற ஒரு நிலநடுக்கத்தில் ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தனர். சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து நொருங்கின. இந்த நிலநடுக்கம் அப்போது 7.6 ரிச்டர் அளவில் பதிவானது. (ம-9)

நெல்சன் மண்டேலாவுக்கு கனேடிய அரசு கௌரவம்

தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு 'கௌரவ பிரஜை' என்ற அந்தஸ்தை வழங்க கனடா அரசுக்கு, அந்த நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

நோபல் பரிசு பெற்ற, 82 வயதான மண்டேலாவுக்கு கௌரவ பிரஜை அந்தஸ்தை வழங்க ஏகமனதாக ஒப்புதல் தரப்பட்டது. மண்டேலாவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க முன்னர் எதிர்புத் தெரிவித்து வந்த கனடிய எதிர்க்கட்சித் தலைவர் ரொக் ஆன்டேர்ஸ் அப்போது நாடாளுமன்றத்தில் சமுகமளித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மண்டேலாவுக்கு முன்னதாக ஒரேயொரு வெளிநாட்டவருக்கு மட்டுமே கனேடிய கௌரவப் பிரஜை அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. இரண்டாம் உலக மகாயுத்தக் காலத்தில் ஆயிரக்கணக்கான யூதர்களின் உயிர்களை காப்பாற்றிய பிரிட்டிஷ் ராஜதந்திரி வலன்பேர்க் என்பவரே அவராவார்.(ஒ-4)

மன்னர் குடும்பக் கொலை குறித்த விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

விவரங்கள் வெளியாகவில்லை

காத்மண்டு,ஜூன்15

நேபாள மன்னர் குடும்பம் கூண்டோடு சுட்டுக்கொல்லப்பட்ட அரண்மனைப் படுகொலைகள் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட வசேட விசாரணக்குழு தனது அறிக்கையை நேற்று மன்னர் ஜியானேந்திராவிடம் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையில் இளவரசர் திபேந்திராவுக்கும் அரண்மனைப் படுகொலைகளுக்கும் உள்ள தொடர்பு, அவரது காதல் விவகாரங்கள், படுகொலைகள் இடம்பெற்ற அன்று நடைபெற்ற சம்பவங்கள் என்பன குறித்து விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் கூறப்படுகின்றது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் எப்போது வெளியிடப்படும் என்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் "அறிக்கையில் என்ன தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை அறிய எங்களுக்கு முழு உரிமையுண்டு" என்று நேபாளியர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

இந்துக்கள் மஞ்சள்நிறப் பட்டி அணியவேண்டும்

தலிபான்களின் உத்தரவுக்கு அமெரிக்கா கடும் கண்டனம்

நாஜிகள் காலத்தை நினைவுபடுத்துகிறதாம்

வாஷிங்ரன்,ஜூன்15

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்துக்கள் மஞ்சள்ப்பட்டிகளை அணிந்து கொள்ள வேண்டும் என்று தலிபான்கள் பிறப்பித்துள்ள உத்தரவை அமெரிக்க பிரதிநிதிகள் சபை கடுமையாகக் கண்டித்துள்ளது.

பிரதிநிதிகள் சபையில் இது தொடர்பான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது சபையின் 420 உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். எவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தலிபான்கள் சர்வதேச சிவில் மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மதித்து நடக்கவேண்டும் என்றும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்துக்கள் தொடர்பாக தலிபான்கள் எடுத்துள்ள இந்த முடிவு நாஜி ஜேர்மனியில் யூதர்கள் மஞ்சள்ப்பட்டி அணியவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டதை நினைவுபடுத்துவதாகவும் பிரதிநிதிகள் சபை தெரிவித்துள்ளது.

விவாதத்தில் கலந்துகொள்ள வந்திருந்த உறுப்பினர்கள் பலர் ஆப்கானிஸ்தான் இந்துக்களுக்கு ஆதரவு தெரிவித்து தாமும் மஞ்சள்ப் பட்டிகளை அணிந்திருந்தனர். (ம-9)

ஸ்தல ஸ்தாபனதொழிலாளர் வேலை நிறுத்த முஸ்தீபு

மாநகர சபையிடம் கோரிக்கைகள் சமர்ப்பிப்பு

குருநகர், ஜூன் 15

யாழ். மாநகரசபையில் கடமைபுரியும் ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து நாளை சனிக்கிழமை முதல் லேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் அ. எட்வின் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள கிளைச் சங்கத்தில் நடைபெற்றது.

பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரும் மகஜர் ஒன்று யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு கடந்த முதலாம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

★ தொழிலாளர்களின் நலன் பேணப்படுதல் வேண்டும்,

★ தற்காலிக தொழிலாளர் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டும்,

★ ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாவும் இளைப்பாறும் உரியகாலத்தில் காலதாமதமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

★ சுகாதாரத் தொழிலாளர் நலன் கருதி யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும் சேதமாக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பதும் அவசியம்.

★ உள்ளக பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு ஒரு தொழிலாளி விண்ணப்பிக்கும் போது அப் பதவியில் பயிற்சியாளராகவோ அல்லது தற்காலிகமாகவோ கடமை புரிந்து வருபவர்களுக்கு அப் பதவி வழங்கப்படுதல் வேண்டும்.

★ 22-10-2000 அன்று நடைபெற்ற உள்ளகப் பதவி உயர்வில் தெரிவான 6 பேருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இம் மகஜரின் பிரதிகள் யாழ். மாநகரசபை முதல்வர், ஈ.பி.டி.பி, அமைப்பாளர், யாழ். பொலீஸ் அத்தியட்சகர், 512 பிரிகேட் அதிகாரி, 51 ஆவது படையணித் தளபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆணையாளருக்கு வழங்கப்பட்ட காலக்கெடு இன்றுடன் முடிவடைவதாகவும் தமது கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாவிட்டால் திட்டமிட்டவாறு நாளை சனிக்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ-51)

நீராவியடி அபிவிருத்திச் சங்க பரிசளிப்பு விழா

நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைச் சங்கத் தலைவர் கை. சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவப்பிரம்மஸ்ரீ நா. பாலசுப்பிரமணிய குருக்களும் வண. பிதா ஜோன் பீற்றர் துரை ரெட்ணமும் வழங்கவுள்ளனர்.

பிரதம விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலர் சி. வேல்முருகோன்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன், நல்லூர்ப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. நிர்மலன், யாழ். மத்திய கல்லூரி உப அதிபர் இ. ஒங்காரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கானபரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கிக் கௌரவிப்பார். (க-4)

வயோதிபப் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

கோயிலுக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்ட வயோதிப மாது ஒருவர் மறுநாள் காலை கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

புலோலி தெற்கு தச்சன் ஓடையைச் சேர்ந்த சோமசுந்தரம் வள்ளியம்மா (வயது 90) என்பவரே கடந்த புதன் கிழமை காலை அப்பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இது சம்பந்தமான பிரேத பரிசோதனையும் மரண விசாரணையும் அங்கு நடைபெற்றபோது நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பு வழங்கிய வடமராட்சிப் பிரதேச திடீர்மரண விசாரணை அதிகாரி இ. கிருபாகரசூரியன், சடலத்தை இறந்தவரின் பெறாமகள் தருமலிங்கம் மீனாட்சிப் பிள்ளையிடம் கையளித்து ஆனைவிழுந்தான் மயானத்தில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார். (ஐ-109)

ஒலிப்பதிவு நாடா வெளியீடு

ஈழத்தின் பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய ஆலயங்கள் மீது சமயக் குரவர்கள் அருளிய தேவாரங்கள் பஞ்சபுராணங்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

'கலாபூஷணம்' எஸ். திலகநாயகம்போல் பாடிய பாடல்கள் கொண்ட இந்த ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (க-4)

ஆங்கில தின போட்டிகள் ஒத்திவைப்பு

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (ஐ-72)

ஊரடங்கு வேளை வீதியில் நடமாடிய நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம். ஜூன் 15

யாழ். நகரை அண்டிய பகுதியில் ஊரங்குச் சட்டம் அமுலில் இருந்த இரவு நேரத்தில் வீதியில் நடமாடியதாகக் கூறப்படும் நான்கு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி—கோயில் வீதிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடமாடியதாக கூறப்படும் கருணைராஜா விஜயபாஸ்கரன் (நல்லூர்), இராயப்பு கிளறன்ஸ் (குருநகர்), செல்வராசா சாந்தராசா (அளவெட்டி), சங்கரன் நடராசா (வட்டுக்கோட்டை) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த நான்கு இளைஞர்களும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை தலா 500 ரூபா அபாரதமாகச் செலுத்துமாறு பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார். (ஐ-5)

தேசிய அரசை வலியுறுத்துவது தீர்வை விரைவில் எட்டவே!

அமைச்சர் திசாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 15

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு வழிவகுப்பதற்காகவே, தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றேன் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சமூர்த்தி மலையக அபிவிருத்தி, நாடாளுமன்ற விவகார அமைச்சரும் பிரதிநிதி அமைச்சருமான எஸ். பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நோர்வே மூலமாக முயற்சித்துள்ளன. இந்தியாவும் இப்பிரச்சினைக்குத் தீர்வு அவசியம் என்பதில் ஆர்வமாக இருந்து வரும் இவ்வேளையில், நமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தீர்வின் முக்கியத்தை இன்னும் உணராமல் இருக்கின்றன என்றும் அமைச்சர் சொன்னார்.

இலங்கை இனப்பிரச்சினை காரணமாக ஐரோப்பிய நாடுகளில் இன்று சுமார் இரண்டு லட்சத்து 76 ஆயிரம் வடக்கு, கிழக்கு மக்கள் அகதிகளாக இருந்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 600 முதல் 800 வரையிலான அமெரிக்க டொலர்கள் நிவாரண உதவிகளாக இந்த நாடுகளில் வழங்கப்படுகின்றன.

இது அந்நாடுகளுக்கு தாங்க முடியாத ஒரு பெருஞ்சுமை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)

8 மீனவர் உட்பட 11 பேர் காங்கேசன்துறை முகாமில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட எட்டு மீனவர்கள் உட்பட பதினொரு பேர் காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்புப் பிரிவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இந்த முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி என். ஜீவேஸ்வரா இத்தகவலைத் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். நகரில் உள்ள 'றான்' அலுவலகத்துக்குச்சென்று திரும்பும் வழியில் கைது செய்யப்பட்ட விவேகானந்தராசா கமல்ராஜ், யாழ். நகர் கன்னாதிட்டிச் சந்தியில் வைத்து கைது செய்யப்பட்ட சண்முகநாதன் குமணன் ஆகியோரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-5]

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஜி.சி.ஈ. உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி இ. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் 'நவீன உலகில் விஞ்ஞானம்' என்னும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். (ஐ-4)

அதிபர்கள் கூட்டம்

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இடம்பெறும் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கோப்பாய்க் கோட்ட கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-72)

காணாமற்போனோர் விசாரணை: கிராம அலுவலர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைகளை நடத்திவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பின்வருவோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அந்தந்தப்பகுதி கிராம சேவையாளர்களை யாழ், பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

காணாமற்போனோரின் பெயர் விவரங்களும் அவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அழைக்கப்பட்ட கிராம அலுவலர்களின் விவரமும் வருமாறு:-

★ கந்தையா—புஸ்பராசா [கோவை இல. 97 கோயிலாக்கண்டி] கந்தையா விக்கினேஸ்வரன் [ஜே/296].

★ சுரேஸ்வரன் — சுமதி [கோவை இல. B/67] [ஊரெழு கிழக்கு சுன்னாகம்] கிருஷ்ணபிள்ளை [கிராம அலுவலர்].

★ ஜோசெப் — கணேஸ்வரன் [கோவை இல. B/24] இல. 93/8 டேவிட் றோட் யாழ்ப்பாணம். [இவர் தொடர்பான விசாரணைக்கு ஜே/70 கிராம அலுவலர்).

★ துரை — தங்கத்துரை [கோவை இல. B/68] யாழ்ப்பாணம், நவரட்ணராஜா [ஜே/125].

★ கனகசிங்கம் — சசிகரன் [கோவை இல. B/68] மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

[இவர் தொடர்பான விசாரணைக்கு இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்].

★ சதாசிவம்—விவேகானந்தன் (கோ. இல.B 28 மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி பரமானந்தன் (ஜே/315)

★ அப்புத்துரை—ஜெயரட்ணம் (கோ.இல. B/34 (இல. 318, திருநெல்வேலி யாழ்ப்பாணம்.) இராஜலிங்கம் (ஜே/112)

★ இராசதுரை—சுரேஸ்குமார் (கோ. இல. B/76) (கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.)

(இவர் தொடர்பான விசாரணைக்கு இப்பகுதி கிராம அலுவலர் சமுகந்தரவும்.)

★ ஜோன்பிள்ளை — அன்ரன் அமலநாதன் (கோ.இல. A-21 (ii) நாவற்குழி கிழக்கு கைதடி, கணேஸ் ஸ்ரீகரன் (ஜே/295)

★ ராஜரட்ணம்—குணரட்ணம், ராஜரட்ணம் கேதீஸ்வரன் (கோ. இல. B/133) நாகர்கோயில் கிழக்கு.

இவர்கள் தொடர்பான விசாரணைக்கு நாகர்கோயில் மேற்கு கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.) (ஐ-4)

தமிழ்த்தின விழா

கோப்பாய், ஜூன் 15

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தமிழ்த்தின விழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-72)

விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூன் 15

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குக் கொக்குவில் இளம்பிறை வி.கவும், கொக்குவில் வராகி வி.கவும் மோதுகின்றன.

யாழ். பல்கலைக்கழக தாச்சி விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டி இடம்பெறும். (க-86)

★ ★ ★

வலி.வடக்கு. ஜூன் 15

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை அணிகள் இடையே நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள 15 வயதுக் குட்பட்டோருக்கானபோட்டியில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாடும்.

யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறும். (க-86)

★ ★ ★

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சன சமூக நிலையங்களுக்கு இடையே, நல்லூர் பிரதேச சபையினால் 7 பேர் பங்கு பற்றும் 6 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில்—

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ நந்தாவில்மனோன்மணி ச.ச. நிலைய 'வி' அணி எதிர் தலையாளி இந்திரா ச.ச. நிலையம்.

★ கோண்டாவில்ஸ்ரீநாராயணா ச.ச. நிலையம் எதிர் கொக்குவில் மத்திய ச.ச. நிலைய 'பி' அணி.

★ கொக்குவில்வளர்மதி ச.ச. நிலையம் எதிர் நல்லூர் மக்கள் ச.ச. நிலைய 'பி' அணி. (க-86)

உதயன்

தமிழர் பாதுகாப்பு உறுதியாவதற்கு...

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த இருபத்தொன்பது தமிழ்க் கைதிகள் கடந்த வருட இறுதியில் காடையர்களால் வெட்டியும், கொத்தியும், எரித்தும் படுகொலை செய்யப்பட்ட சோக நிகழ்வு உலகம் அடங்கிலும் வாழும் மனிதநேயம் உள்ள மக்களின் மனங்களைப் பிழிந்தது.

இந்தப் படுகொலைகள் திட்டமிட்ட முறையில், அரச அதிகாரிகளின் அனுசரணையுடன் குற்றவாளிகள் என்று இனங்காணப்படாத தமிழ் இளைஞர்கள் மீது ஏவிவிடப்பட்ட இன ஒழிப்பாகும்.

குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட கைதியாயினும், நீதிமன்ற விசாரணையை எதிர்பார்த்திருக்கும் தடுப்புக் காவல் கைதியாயினும், பொலீஸ் விசாரணையின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபராயினும் அவர்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு - சட்ட ரீதியான பொறுப்பு - அரசாங்கத்தினுடையதே.

இருப்பினும், இத்தகைய இடங்களில் - சிறைச்சாலைகளில், தடுப்பு முகாம்களில், பொலீஸ் பாதுகாப்பில் என்று எங்குமே தமிழர்களுக்கு எப்போதும் பாதுகாப்பு இருந்ததில்லை; இப்போதும் இல்லை! எப்போது உயிராபத்து வரும் என்ற மரண பயத்துடனேயே ஒவ்வொரு கணத்தையும் கழிக்கும் அவஸ்தையான சூழலே தமிழர்களுக்கு.

அரசாங்கமே பாதுகாப்புக்கு முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டிய மேற்கண்ட இடங்களில் தமிழர்களை அரசாங்க அதிகாரிகளின் அனுசரணையுடன், ஒத்துழைப்புடன் காடையாகளும் குண்டர்களும் படுகொலை செய்வது வழக்கமாகிவிட்டது.

இத்தகைய காட்டுமிராண்டித் தனமான இனப் படுகொலைகளைச் செய்வதில் தங்களைவிடக் கெட்டிக்காரர்கள் இல்லை என்று உலகத்துக்கு நிரூபித்துக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள் இனத்துவேஷிகள்.

1983ஜூலை 25ஆம் 27ஆம் திகதிகளில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் மெலியாரை வலியார் கொல்லும் வல்லமை, உலக மக்கள் எல்லோரையும் விட தங்களிடமே உண்டு என்று காட்டத் தொடங்கி -

இன்னமும் அதனைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் - பிந்துனுவெவ முகாம் வரை!

நீதிமன்றத்தில் தமக்கு எதிராக வழக்குத் தொடரவேண்டும், இல்லையேல் விடுதலை செய்யவேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருக்கப்போவதாகச் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் கூறியதாகவும் -

அதனை ஒரு காரணமாக வைத்தே காட்டுமிராண்டித்தனம், அரச உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் கட்டவிழ்த்துவிடப்பட்டதாகவும் -

படுகொலைகள் நடந்த போது அங்கு நின்ற பொலீஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக் கொண்டு நின்றதாகவும் - முன்னர் உள்ளகத் தகவல்களாகப் பேசப்பட்டது.

அவற்றில் ஒன்றான படுகொலைகள் நடத்தப்பட்ட போது ஆயுதபாணிகளாக நின்ற பொலீஸார் பார்த்துக்கொண்டு நின்றார்கள் என்ற தகவல் ஊர்ஜிதமாகி உள்ளது.

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் குறித்து விசாரிக்கும் விசேட ஆணைக்குழுவிடம், தடுப்பு முகாமின் பொறுப்பதிகாரி கப்டன் அபேரட்ண படுகொலைகளைப் பொலீஸார் பார்த்துக்கொண்டு நின்றனர் என்று தெரிவித்துள்ளார். இதேவேளை ஏனைய உள்ளகத் தகவல்களும் ஊர்ஜிதமாகும் என எதிர்பார்க்கலாம்.

பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களே படுகொலைகளைத் தூண்டவும், துணைபோகவும், பார்த்துக் கொண்டு நிற்கவும் செய்கிறார்கள் என்றால் -

தமிழர்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு மற்றும் வாழ்வுரிமை உறுதி செய்யப்படும் என்று எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்?

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பு என்ற நிலைக்கு வசதி செய்யும் ஆட்சி உரிமை, அதிகாரம் என்பன அவர்களிடம் வந்தால் மட்டுமே மரண பயமும், பாதுகாப்பின்மையும் நீங்கும். சிங்கள அரசுகளின் அதிகாரத்தின் கீழ் வாழும் வரை அவர்களுக்கு நிம்மதி இருக்காது. இது நிச்சயம்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை நேரில் சென்று பராமரிக்க உதவுக!

இந்திய மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்15

ஊர்காவற்றுறை கடற்கரைப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது படகுகளை நாம் நேரில் சென்று பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்.சிறைச்சாலைக்குச் சென்ற மேலதிக அரசாங்க அதிபர் அங்குள்ள இந்திய மீனவர்களைச் சந்தித்து அவர்களின் நலன்களை கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பின் போது தமது குறைபாடுகளைத் தெரிவித்த இந்திய மீனவர்கள், தாம் கடலில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட போது தமது 11 படகுகள் படையினரால் பறிக்கப்பட்டு ஊர்காவற்றுறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் -

இப்படகுகளில் கடல் நீர் உட்புகுவதால் இயந்திரங்கள் துருப்பிடித்து சேதம் அடையும் அபாயம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினர். (க-5)

நாட்டு நடப்பு

'பகிடி வதை' - V

பேசிப் பேசி காலம் போக்கி
பாழ்பட்ட தெம் மினம்
பேச்சில் என்ன இருக்குதடா
'ஒலிபரப்பி' கூடப் பேசுமே
முச்சு வாங்கப் பேசிவிட்டு
முண்டு சோடா குடித்தென்ன?
போச்சு போச்சு எங்கள் மானம்
"பகிடி வதையை" போக்க முந்திடு!

- விகடகவி -

புலிகள் மீதான தடையை நீக்கி

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் தரவேண்டும்

நெதர்லாந்து அதிகாரிகளிடம் யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜூன்15

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி இலங்கை அரசாங்கம் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் மேற்படி கோரிக்கையை நெதர்லாந்து தூதரகச் செயலாளர்களிடம் முன்வைத்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நெதர்லாந்துச் செயலாளர்களைச் சந்தித்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் மேலும் கூறியதாவது:-

சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிவரும் உதவிகளை நிறுத்தி, நாட்டில் சமாதானம் ஏற்பட்ட பின்னரே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்கவேண்டும். சண்டை நடக்கும் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் சாத்தியப்படாது. எனவே நாட்டில் சமாதானம் ஏற்பட்ட பின்னர் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதே சிறப்பாக அமையும்.

நோர்வே அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தற்போது தடைப்பட்டுள்ளன. இது எமக்கு மிகவும் மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்பதே எமதுவிருப்பம். இதற்கு சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

எமது மாணவர்களைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து ஐம்பதாயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. இதனால் இந்தப் பகுதியில் வாழ்ந்த மாணவர்களும் இடம்பெயர்ந்து படிக்கமுடியாத சூழ்நிலையில் உள்ளனர்.

வன்னிப் பிரதேசத்துக்கும் குடாநாட்டுக்கும் இடையிலான போக்குவரத்துத் தொடர்புகள் எவையும் இல்லை. இதனால் வன்னிப் பகுதி மாணவர்கள் தமது பெற்றோரைப் பிரிந்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 1996 ஆம் ஆண்டின் பின்னர் எமது சக மாணவர்கள் 4 பேர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து காணாமற்போயுள்ளனர். எமது இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்களும் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் இந்த விடயத்தில் அவர்கள் நடவடிக்கை எடுக்கமுடியாத நிலைமையில் உள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளும், எழுதுவினைஞர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரையாற்றினர். அவர்கள் கூறியதாவது:-

தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பம்

அரசாங்கம் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கி உடனடியாக யுத்தநிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பம் ஆகும்.

சாவகச்சேரிப் பகுதியில் தமிழ் மக்களின் குடியிருப்புக்களை அரசாங்கப் படைகள் அழித்து வருகின்றன. இந்த அழிவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

யுத்தம் ஓய்ந்த அந்தப் பிரதேசத்தில் மீண்டும் ஒரு யுத்த சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் அரச படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதனால்தான் சர்வதேச சமூகத்திடம் ஒருமித்த குரலில், நாட்டில் நடைபெற்று வரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று கோருகிறோம். அந்தப் பேச்சில் புலிகளை இணைத்துக் கொள்வதற்கு வசதியாக புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். (க-6)

உருளைக்கிழங்கு விலை திடீர் சரிவு

அரியாலை,ஜூன்15

குடாநாட்டில் உருளைக்கிழங்கின் விலை திடீரென சரிந்துள்ளது.

கிலோ 180 ரூபாவாக விற்கப்பட்ட உருளைக்கிழங்கு தற்போது 70 ரூபாவாகக் குறைந்துவிட்டது.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் உருளைக்கிழங்கு வந்ததை அடுத்தே விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. (க-17)

மின்சார வலு அதிகரிப்பால் பாதிப்பு

தென்மராட்சி,ஜூன்15

வடமராட்சிப் பகுதியில் கடந்த ஒரு மாதமாக பகல் வேளைகளில் மின்சாரத்தின் வலு கூடுதலாக வருவதால், ரீ.வி., றேடியோ உட்பட பல மின்சார சாதனங்கள் பழுதடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இப்பகுதியில் உள்ள மின்மாற்றி திருத்தம் செய்யப்பட்ட பின்னரே மின்சாரத்தின் வலு கூடுதலாக வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிலவேளைகளில் 246 வோல்ட் மின்சாரம் வருவதன் காரணமாகவே மின்சாதனங்களின் உதிரிப்பாகங்கள் தாக்கப்படுவதாக மின்னியலாளர் ஒருவர் தெரிவித்தார். (க-117)

கொழும்புத்துறைப் பிரதேசத்தில்

மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்

கலந்துரையாடலில் பிரதேச சபைத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஜூன்15

கொழும்புத்துறைப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறை மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பாக கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய முன்றிலில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்புத்துறை இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியதாவது:-

இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் வாழும் கொழும்புத்துறை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும். இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதுடன் அவர்களின் ஆலயங்களில் பூசைகள் நடைபெற்று அந்த ஆலயங்களில் மணி ஓசைகள் கேட்க வேண்டும். இதுவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும், ஜனாதிபதியினதும் விருப்பமாகும் என்றும் கூறினார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட மக்கள் மீளக்குடியமர்தல், கடற்றொழிலை ஆரம்பித்தல், ஆலயங்கள் புனரமைப்பு, பாடசாலைகளை மீளஇயங்கச் செய்தல் உட்பட பல வேறு விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிப்பதற்கான மகஜர் ஒன்றை ந.திரிலோகநாதனிடம் கொழும்புத்துறை மக்கள் கையளித்தனர்.

கொழும்புத்துறை இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் யாழ்.நகர அமைப்பாளர் ரீ.ரீகன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் எம்.ஜேசுதாசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க-5-9-17)

நாளை

ஆனி 2
சனிக்கிழமை
திதி: தசமி
முன்னிரவு 9.41 வரை.
நட்சத்திரம்: ரேவதி
மாலை 6.38 வரை.
சுபநேரம் : 2.53 - 4.23
ராகுகாலம் : 8.53 - 10.23
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

கண் உள்ளவனைக் காட்டிலும் குருடன் மிகக் குறைவாகவே தடுக்கி விழுகிறான்.

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

பெற்றோர்களே!
அறிமுகமற்ற
பொருள்களின் வடிவில்
பொறிகள்
மறைந்துள்ளன -
மறைந்திருக்கும்.

இந்தத் தாயைப் போன்று நீங்களும் ஆர்வம் நிறைந்த, திகில் விரும்பும் குழந்தைகளுக்கு அவற்றைப் பற்றி எச்சரியுங்கள்!

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாமனிதர் பேராசிரியர் அ.துரைராஜாவின் 7ஆவது ஆண்டு நினைவையொட்டி இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியப் பொது அறையில் மாணவர் ஒருவர் இரத்ததானம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர்கள் செ.சிவஞானசுந்தரம், அ.நவரட்ணராஜா ஆகியோர் அதனை அவதானித்துக்கொண்டிருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

மாணவ மாணவிகள் இரத்ததானம் வழங்குவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: றோய் மதிவதனன்)

முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழியில் ஆறுமாதகாலப் பயிற்சி.
கடைசித் தகைமை: க.பொ.த. (சாதாரணதரம்)

விவரங்களுக்கு:- பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.

(88602)

மானிப்பாய்

புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழா

17.06.2001

திருப்பலிகள்:- காலை 6.00 மணி முதல் திருப்பலி
காலை 7.30 மணி திருநாள் கூட்டுத்திருப்பலி
யாழ்.ஆயர் தலைமையில்

நற்கருணை விழா:- 16.06.2001
மாலை 5.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
புனித அந்தோனியார் பெயரில் எமது நன்றிகள்.

இத்திருத்தலக் காணி விஸ்தரிப்புக்காகத் தங்களால் இயன்றளவு அன்பளிப்புக்களை தாராள மனத்துடன் செய்த உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்கள், இந்து மத சகோதரர்கள், குருக்கள், குருக்களின் தாய், தந்தை, சகோதர சகோதரிகள், இந்த அன்பளிப்புக்களைப் பெற்றுத்தந்த அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

10-06-2001 வரை கிடைத்த அன்பளிப்புக்கள்

இங்கு கிடைத்த அன்பளிப்பு	:	ரூ.451 737.00
வெளிநாடுகளிலிருந்து கிடைத்தஅன்பளிப்பு	:	ரூ.268 820.00
மொத்தம்		ரூ.720 557.00

கோடியற்புதுரின் அன்பும் பரிந்துரையும் என்றும் உங்களுடன் இருக்க ஆசித்து மன்றாடுகின்றோம்.

(89019) அருட்திரு.அ.பெ.பெனற், பரிபாலகர்.

6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

கதிரவேலு பரமசாமி

(பத்திரிகையாளர், தலையாழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய நிர்வாகி)

தலையாழிப்பதியுறை வைரவனுக்குப் - பன்னீராண்டு
தளராது பணிசெய்த தொண்டனே!
தையதனில் அவன் கோயில் புனரமைக்க விளைந்தநீ!
வானுலகில் வடுகனுக்கு ஆலயம் எடுக்கவோ
விரைந்தாய்? அநாதையாய் அல்லலுற எனைவிட்டு ஐயா!
வடுகனவன் வாசலில் பணிச் சிறப்பால் உன்நாமம்
வழிபடுநர் வாயில் தினம் ஒலிக்கிறதே தம்பி!

தலையாழி,
கொக்குவில். (89033) *சகோதரி:* திருமதி.கு.ஷண்முகடாஸ்

மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்15

யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முதல்வர் என்.ராவிராஜ் தலைமையில் மாநகர சபையில் நடைபெறவுள்ளது.

மாதாந்தக் கூட்டத்துக்கு முன்னர் 26ஆம் திகதி மராமத்துக்குழு, நிதிக்குழு, சுகாதாரக்குழுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (க-5)

காரைநகரில் கண்காட்சி

காரைநகர்,ஜுன்15

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் மாணவர் திறன் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதியும், சிறப்பு விருந்தினராக காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை செயலர் ச.பத்மநாதனும் கலந்துகொள்வர். (க-73)

மந்திகை ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சைப் பிரிவு செயலிழப்பு

தென்மராட்சி,ஜுன்15

மந்திகை ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவு முற்றாக செயலிழந்துள்ளது. இந்தப் பிரிவில் கடமையாற்றிய எல்லை கடந்த நாடுகளின் மருத்துவக் குழுவைச் (எம்.எஸ்.எவ்.) சேர்ந்த வைத்தியர் விடுமுறையில் தனது சொந்த நாட்டுககுச் சென்றதையடுத்து சத்திர சிகிச்சைப் பிரிவு செயலிழந்துள்ளது.

மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படும் அவசர நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

பரிசளிப்பு விழா

சாவகச்சேரி,ஜுன்15

கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளியரங்கில் பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராடசி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்துகொள்வார். (க-31)

முன்பள்ளி மாணவர் போட்டி

காரைநகர்,ஜுன்15

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை முன்பள்ளி மாணவர்களிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் இம்மாதத்திற்குரிய போட்டி இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் இப் போட்டிகளில் காரைநகர் பகுதியில் உள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்வர். (க-73)

பிரார்த்தனை

வடமாநில இந்து மாமன்றம் யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சமய, சமுதாய நற்சிந்தனைப் பிராத்தனைகளை நடத்தி வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் மன்ற அமைப்பாளர் சு.குரராஜா தலைமையில் இந்தப் பிரார்த்தனை இடம் பெறும். (க-17)

உ

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

விஷு வருட மஹோற்சவம் - 2001

அம்பாள் அடியார்களே!

மேற்படி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 17.06.2001 ஞாயிற்றுக் கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற உள்ளது. அனைவரும் வருகை தந்து அம்பாள் அருள் பெறும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கொடியேற்றம் - 17.06.2001 ஞாயிறு
தேர்த்திருவிழா - 26.06.2001 செவ்வாய்
தீர்த்தவிழா - 27.06.2001 புதன்

(89026) - ஆலய பரிபாலனசபை.

ஒத்திகை

நீலாவணன் கவிதைகள்

நூல் வெளியீடு

24.06.2001 - ஞாயிறு மாலை 5 மணி
வெள்ளவத்தை உருத்திரா மாவத்தை
கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபம்
தலைமை : கலாநிதி எம்.ஏ.நுஃமான்

நிகழ்வுகள்

தமிழ் வாழ்த்து	:	செல்வன் க.கிரிஷாந்
வரவேற்புரை	:	திரு.க.கோபாலகிருஷ்ணன் *(செங்கதிரோன்)*
தலைமையுரை	:	கலாநிதி எம்.ஏ.நுஃமான் *(பேராதனைப் பல்கலைக்கழகம்)*
வெளியீட்டுரை	:	திரு. எஸ். எழில்வேந்தன்
அறிமுகவுரை	:	திரு.ஜெ.திவ்யநாதன் *(முன்னாள் நா.உ.)*
நூல் வெளியீடு	:	*முதற் பிரதி பெறுபவர்* திருமிகு பொன்.வல்லிபுரம் *(ஜே.பி.)* *(வெள்ளவத்தை ஸ்ரீ மயூரபதி அம்பாள் ஆலய அறங்காவலர்)* *கௌரவப் பிரதிகள் பெறுவோர்* ▣ அமரர் புலவர்மணி ஆ.மு.ஷரிபுதீன் அவர்களின் புதல்வர் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுதீன் ▣ அமரர் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் புதல்வர் திரு.பெ.விஜயரத்தினம் ▣ அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் புதல்வர் திரு.சி.ராஜன் உதயநாயகம்
ஆய்வுரை	:	கலாநிதி சி.சிவசேகரம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)
சிறப்புரை	:	கலாநிதி சி.மௌனகுரு (கிழக்குப் பல்கலைக்கழகம்)
நன்றியுரை	:	

தங்கள் வரவினையும் தயவோடு வேண்டுகின்றோம்.

(C-17097)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
சகுந்தலராணி மகாதேவன்

அன்னை மடியில் 01.05.1943 — அமலன் அடியில் 17.05.2001

17.05.2001இல் இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு, நேரடியாகவும், தபால் மூலமும் எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (16.06.2001) சனிக்கிழமை அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காகஅவரது இல்லத்தில் நடைபெறும் ஆராதனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'ரட்ணமஹால்'
பொன்னம்பலம் வீதி,
உடுவில் றோட், மானிப்பாய். (89010) அன்புக்கணவர், மகள்.

கல்வியின் உண்மையான இறுதி நோக்கங்கள் நல்லொழுக்கம், நற்பண்புகளை தேடிக்கொள்வதே

யாழ். சைவ பரிபாலன சபையினரின் பட்டமளிப்பு - பரிசளிப்பு விழா கடந்த வாரம் நடைபெற்றது. "கல்வியின் நோக்கம்" என்ற தலைப்பில் ஆற்றப்பட்ட உரையின் கட்டுரை வடிவம் இது.

கடந்த சில வருடங்களாக யாழ் குடாநாட்டில் இளைஞர்களிடையே ஒழுக்கம் மிகவேகமாகக் குன்றி வருவது கவலை தரும் உண்மை. அறுபதுகளுக்கு முன்னர் ஆசிரியர்கள் படித்த, புத்திக்கூர்மையுள்ள பெருமதிப்புக்குரிய சமூகத் தலைவர்களாகப் போற்றப்பட்டார்கள். இளைஞரிடையே மிகச்சிறந்த ஒழுக்கத்தைப் பேணுவதில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகித்தார்கள். ஒழுக்கம் பேணுவதிலும் செயற்படுத்துவதிலும் பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு முழுமையான ஆதரவுவழங்கினார்கள். துரதிர்ஷ்டவசமாக கல்வி வியாபாரமாக மாறியதும் தனியார் கல்வி நிறுவனங்கள் காளான்கள் போன்று முளைத்தெழுந்ததும் மாணவர்களை ஆசிரியர்களின் செல்வாக்கு வலயத்திற்கு வெளியே இழுத்துச் சென்றுவிட்டது.

ஆசிரியர்கள் தமது பழைய கௌரவ நிலையை அடைய முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்கள் தான் மாணவர்களை முழுமையானவர்களாக வடிவமைப்பவர்கள் என்பதை மாணவர்களும் சமுதாயமும் உணரக்கூடிய முறையில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் அமையும் போது, ஆசிரியர்கள் தமது பழைய கௌரவ நிலையை மீளப் பெறுவார்கள். ஆசிரியர்கள் கற்பித்தல் மூலம் அறிவூட்டுபவர்கள் மட்டுமல்ல. அவர்கள் மாணவர்களுக்கு வாழ்ந்து காட்டும் மாதிரிகளாகவும் அமைய வேண்டியவர்கள்.

கடந்த இரு தசாப்தங்களில் உருவாகிய - கவலைக்குரியவொரு இன்னுமொரு விடயமென்னவெனில் குழந்தைகள், குழந்தைப் பருவத்தில் அனுபவிக்க வேண்டிய சந்தோஷத்தை அவர்களிடமிருந்து பெற்றோர்கள் பறித்தெடுத்துக்கொண்டமையாகும். எங்கள் பிள்ளைகளில் எத்தனை பேருக்கு அயலிலுள்ள ஏனைய குழந்தைகளுடன் விளையாடுவதற்கு நேரம் கிடைக்கிறது? அவர்களைத் தினமும் , நாள் முழுவதும், வேலைசெய்யுமாறு - படிக்குமாறு - வற்புறுத்துவதன் மூலம் பெற்றோராகிய நாம் அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறிக்கவில்லையா? எமது குழந்தைகள் சூரிய ஒளியின் சூட்டைக் கண்டறியாத பூக்கள் போல வளரவில்லையா?

சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை , முழு நேரத்தையும், எல்லாத் தரத்திலுள்ள பிள்ளைகளும் பாடசாலைகளில் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் , தமது ஆசிரியர்கள் அல்லது பயிற்றுவிப்பவர்கள் கூறுபவற்றைக் குறிப்பெடுப்பதில் அல்லது அவர்கள் கொடுக்கும் பயிற்சிகளைச் செய்வதில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் அழுத்தம் கொஞ்சநஞ்சமல்ல. இது தேவைதானா?

சுயமாகச் சிந்திக்க அனுமதி இல்லை

மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்க அனுமதிக்காதவாறு இன்று பிள்ளைகளிடையே பாடங்கள் திணிக்கப்படுகின்றன. இது ஒரு ஆரோக்கியமான விடயமல்ல. க.பொ.த. சாதாரண வகுப்பு வரையாவது மாணவர்களைத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பக்கூடாது என்பது எனது அபிப்பிராயம்.

இன்று பெற்றோரின் ஒரே நோக்கம் தமது பிள்ளைகளை எவ்விதத்திலும் க.பொ.த. சாதாரண பரீட்சையில் பத்து Dயும் உயர்தர பரீட்சையில் மூன்று Aயும் பெறச்செய்வது என்ற அளவில் மட்டுமே உள்ளது. பிள்ளைகள் நல்ல பெறுபேறுகள் பெறப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முழு முயற்சி எடுக்க வேண்டியவர்களே. அதேவேளை மாணவர்கள் சமூகத்திற்கு உதவாதவர்களாக வளர்வார்களாயின் இப்பெறுபேறுகளைப் பெற மாணவர்களுக்குக் கல்வியூட்டுவதனால் என்ன பயன்? பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தேர்வில் நல்ல பெறுபேறுகள் பெற முயற்சிப்பது போல் அவர்கள் ஒழுக்கம் , பண்பு , அடக்கம் உடையவர்களாக வளர்வதையும் பெற்றோர் உறுதி செய்து கொள்வது மிகவும் அவசியம்.

எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகத்தான் பிறக்கிறார்கள். ஆனால் அவர்கள் எவ்வாறான வர்களாக பரிணமிக்கிறார்கள் என்பது அவர்கள் எவ்வாறான சூழலில் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள் என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. சமூகம், பாடசாலை, வீடு மூன்றும் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் ஒழுக்கத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றன.

பிள்ளையை ஒழுக்கத்திற்குப் பெயர் பெற்ற பாடசாலையொன்றுக்கு அனுப்பிவிட்டோம். பிள்ளையை ஒழுக்கமுள்ளதாக வளர்த்தெடுப்பது பாடசாலை அதிபரினதும் ஆசிரியர்களினதும் கடன் என்று நினைத்து பெற்றோர்கள் தமது பொறுப்புகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ளக்கூடாது; ஒதுங்க முடியாது. பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் பங்கு பாடசாலைகளினதும் ஆசிரியர்களினதும் பங்குக்கு இரண்டாம் பட்சமானதல்ல. வீட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுதல் வேண்டும். பெற்றோர் ஒழுக்கவீனமாக நடந்துகொண்டு பிள்ளைகள் வேறுவிதமாக நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.

பேராசிரியர்
இ.குமாரவடிவேல்
விஞ்ஞான பீடாதிபதி,
யாழ்.பல்கலைக்கழகம்.

காலையில் தூக்கத்திலிருந்து விழிப்பது முதல் இரவு நித்திரைக்குச் செல்லும் வரை பிள்ளைகள் வீட்டில் செலவிடும் பொழுதை எவ்வாறு செலவிடவேண்டும்; வீட்டிலுள்ளோரகளுடனும் அயலவர்களுடனும் எவ்வாறு பழகுதல் வேண்டும் என்பதை அன்பு அரவணைப்புடன் பழக்க வேண்டிய கடமை பெற்றோருடையது. வீட்டில் மாணவர் தமது பாடங்களைக் கற்றற்குகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர் கடன்.

பிள்ளைகள் தமது பாடங்களைப் படிக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டு, பெற்றோர்கள் தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன் சதா வீற்றிருப்பதும் , வானொலிப் பெட்டியை இரைய விட்டுக்கொண்டிருப்பதும் பிள்ளைகளின் கவனத்தைத் திசைதிருப்பக்கூடிய முறையில் சண்டையிட்டுக் கொண்டோ குடும்பப் பிரச்சினைகளையும் ஊர்ப் பிரச்சினைகளையும் நாட்டுப் பிரச்சினைகளையும் பற்றி அரட்டையடித்துக்கொண்டிருப்பதோ மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவமாட்டாது.

வீட்டிற்கு வெளியே செல்லும் போது, பொது இடங்களிலும் , வீதிகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிள்ளைகள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள், பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்கிறார்களா என்பதை அவதானிக்க வேண்டியது பெற்றோரினது கடமை. 'எனது பிள்ளை அவ்வாறு நடக்கமாட்டான் - நடக்கக்கூடியவனல்ல' என்ற நிலைப்பாட்டை எடுப்பது முட்டாள்தன மானது. குழந்தைகள் எல்லாம் நல்ல குழந்தைகளாகவே பிறக்கின்றன. ஆனால் அவர்கள் வளரும் சூழலும் சகவாசமுமே அவர்கள் நல்லவர்களாகவா அன்றித் தீயவர்களாகவா வளர்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்கின்றன. இதனைப் பெற்றோர் கருத்திற்கொள்வது நன்மை பயக்கும்.

பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலைச் சுற்றாடலிலுள்ள சமூகத் தலைவர்கள் அடிக்கடி சந்தித்து பாடசாலைச் சுற்றாடலில இளைஞர்களின் நடத்தைகளை ஆய்வு செய்வது நன்மை தரலாம்.

மாசறக் கற்றல்

'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற ஔவை வாக்கு நாமெல்லோரும் நன்கறிந்தது. ஆனால் கற்றவர்கள் பற்றி ஒரு அடைமொழியை வைத்துத்தான் ஔவையார் பாடியுள்ளார்:

'மன்னனும் மாசறக் கற்றோனும்
சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன்
சிறப்புடையன் - மன்னற்கு
தன்தேசமல்லால் சிறப்பில்லைக்
கற்றோர்க்கு
சென்ற இடமெல்லாம் சிறப்பு'

என்பது ஔவை வாக்கு.

இங்கு 'மாசற' என்றொரு அடைமொழியையை ஔவையார் உபயோகிப்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். கற்பதை ஐயந்திரிபறக் கற்றல் எனச் சாதாரணமாகப் பொருள்கொள்வர். இதைவிட ஆழமான பொருள் இதற்கு உண்டு. மாசறக் கற்றவனிடம் ஒழுக்கமும் பண்பும் கட்டாயம் இருக்கும். செல்வந்தனிடம் அது இருக்கலாம். இல்லாது போகலாம். அதனாற்றான் கல்விக்கு முதலிடமும் செல்வத் திற்கு இரண்டாமிடமும் அளித்து ஔவையார் பாடினார்.

பரீட்சையிற் சித்தியடையும் நோக்கோடு பாடப் புத்தகங்களையும் ஆசிரியர் தரும் குறிப்புகளையும் மட்டும் படிப்பது மாசறக் கற்றல் ஆகாது. வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். வாசிக்கும் பழக்கத்தை சிறுவயதில் ஏற்படுத்திக்கொள்வது சுலபம். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நற்குணங்களை மனதிற் ஆழமாகப் பதிக்கக்கூடிய நூல்களை வாசிப்பதைச் சிறு வயது முதல் ஊக்குவித்தல் வேண்டும். மாணவர்கள் தம்மை நடமாடும் நூலகங்களாக மாற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். வாசிப்பதை ஒரு போதும் கைவிடக்கூடாது.

இதனையே ஔவையார் 'நூல் பல கல்' என அருமையாகக் கூறி வைத்துள்ளார். இன்று வாசிக்கும் பழக்கம் அருகிவருவது கவலை தருகிறது. அதற்கான காரணங்களுள் முதன்மையானது மாணவர்களுக்குத் தமது பாடப்புத்தகங்களையும் பாடக்குறிப்புகளையும் தவிர்ந்த வேறெதனையும் படிக்க நேரமில்லை என்பதாகும். கல்வி வியாபாரமயமாக்கப்பட்டதன் மற்றுமொரு தீய விளைவு இது.

வாசிப்பும் பொது அறிவும்

வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களிடம் பொது அறிவு இருக்கும். பொது அறிவு வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. எம்மைச் சுற்றி இவ்வுலகத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியம். இன்று மாணவர்களில் எத்தனை சதவீதத்தினர் பத்திரிகைகளை வாசித்து உலக நடப்புகளைத் தெரிந்து கொள்கின்றனர்? ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பொது அறிவையும் வாசிக்கும் பழக்கத்தையும் வளர்க்க பாடசாலை நேரசூசிகையில் வாரத்தில் ஒரு பாடவேளையை ஒதுக்குவது நன்மை பயக்குமென நம்புகிறேன்.

சிலருக்கு சில வல்லமைகள் இயற்கையாகவே அமைந்துவிடுகின்றன. சில பிள்ளைகளுக்கு விஞ்ஞான ஆய்வில் நாட்டமிருக்கும். சிலருக்கு தொழில்நுட்பத்தில் நாட்டமிருக்கும். சிலருக்கு சில கலைகளில் விருப்பிருக்கும். சிலருக்கு மொழியாற்றல் இருக்கும். அவரவர்களுக்கு இருக்கும் வல்லமைகளை மாணவர்கள் வளர்த்துக்கொள்ளப் பெற்றோரும் பாடசாலைச் சமூகமும் ஊக்கமளிக்கவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகள் டாக்டராக அல்லது பொறியியலாளராக வரவேண்டுமென எதிர்பார்த்து பிள்ளைக்கு விருப்பமில்லாத பாடங்களைப் பிரதானமாகக் கற்குமாறு வற்புறுத்துவது நல்லதல்ல. பலனளிக்கப்போவதுமில்லை. மாணவர் ஒவ்வொருவரினதும் வல்லமைக்கும் விருப்புக்கும் ஏற்பவே அவர்கள் பார்க்கப் போகும் தொழில் அமைதல் வேண்டும். அவர்கள் படிக்கும் பிரதான பாடங்களும் அதற்குத் தகத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் மாணவர்களிடம் விடப்படவேண்டும்.

நாம் எதைச் செய்யினும் அதில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் இருந்தாற்றான் மனத்தெளிவு, உற்சாகம் , செய்யும் செயலில் விருப்பம் , முயற்சிக்கான விருப்பம் ஆகியன தானாக வரும். எமது செயல் வெற்றியைத் தரும். ஆகவே நாம் செய்யும் செயல்களை அரைகுறையாகவன்றி, முழுமனதோடு நிறைவாகச் செய்ய முயற்சித்தல் வேண்டும். *'செய்வன திருந்தச் செய்'* என்பது நினைவில் வைத்திருக்க வேண்டிய வாக்கு. கல்வியில் உயர ஊக்கம் அவசியம்.

ஊக்கமது கைவிடேல், ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு, சோம்பித் திரிபேல் போன்ற ஔவை வாக்குகளை மாணவர்கள் மனதில் பதித்துக்கொள்ளல் வேண்டும்.

சூரிய ஒளியின் சூட்டைக் கண்டறியாத பூக்களைப் போல குழந்தைகளை வளர்க்காதீர்!

கல்வியின் உண்மையான இறுதி நோக்கம் ஒழுக்கமும் பண்பும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தியிருந்தேன். கல்வியுடன் ஒழுக்கமும் பண்பும் இருந்தால் மட்டுமே அடக்கம், அருளுடைமை, அவா இன்மை, இனிய பேச்சு, இன்னா செய்யாமை, கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை போன்ற நற்குணங்கள் அமையும். ஆகவே ஒழுக்கம் பண்பு பற்றி சிறிது விரிவாகச் சிந்திப்பது உபயோகமுள்ளதாக அமையும்.

ஒழுக்கம் மிக முக்கியம். எவ்வளவு உயர்குடிப்பிறந்தாலும் ஒழுக்கம் குறைந்தவன் இழிந்த பிறப்பினன்தான் என்கிறார் வள்ளுவர். *ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்.*

தினமும் பாடசாலைகள் ஆரம்பமாகும்போது நடைபெறும் பிரார்த்தனையைத் தொடர்ந்து ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் போன்ற அறநெறி நூல்களிலுள்ள உபதேசமொன்றைக் கருப்பொருளாகக் கொண்டு ஐந்து பத்து நிமிடங்கள் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மாணவரொருவரைப் பேச வைப்பது விரும்பத்தக்கது.

புகைத்தல், மது அருந்துதல் போன்ற கெட்ட பழக்கங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றி மாணவருக்கு போதிக்கப்படவேண்டும். தெருவில் தேவையில்லாது அலைவது, கெட்ட வார்த்தைகள் பேசுவது, அழுக்காக இருப்பது, படியாதிருப்பது போன்றன ஒழுக்கக் குறைவான செயற்பாடுகள் என்பன உணரவைக்கப்படவேண்டும்.

(வளரும்)

ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனம்; இதுவரை நீதி வழங்கப்படாதது ஏன்?

தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர் நியமனம் வழங்கலுக்கென கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி..... போன்ற பாடங்களுக்கு 1999 பிற்பகுதியில் விண்ணப்பங்கள் அரச வர்த்தமானி மூலம் கோரப்பட்டிருந்தன. அதன்படி நேர்முகப்பரீட்சைக்காக ஆரம்பக்கல்வி தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பதாரிகள அழைக்கப்பட்டனர். ஆரம்பக் கல்வி அப்போது புறக்கணிக்கப்பட்டது ஏன்? அநீதி ஏன்?

விளைவு, விண்ணப்பித்தோர் விழித்துக்கொண்டனர். சங்கம் அமைத்தனர். போராட்டம் செய்தனர். தமக்குக் கிடைக்காத, வழங்கப்படாத நீதியைக் கேட்டே அவர்கள் இதனைச் செய்தனர். இது தொடர்பாக அரசியல்வாதிகளைச் சந்தித்தனர். சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளை 18.08.2000 அன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற குறைகேள் செயலமாவில், சங்கத்தினர் சந்தித்திருந்தனர். கூட்டங் கூட்டமாகத் தகுதியுடையோருக்கு நியமனம் வழங்க ஆவன செய்யப்படும் என்று வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைசசுப் பிரதிநிதிகள் உறுதிமொழி கொடுத்திருந்தனர். எனினும் சாதகமான - ஆக்கபூர்வமான - நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவிலலை.

இது இவ்வாறிருக்க, ஆரம்பக் கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கத்தினர் எதுவித இலக்குகளும் இன்றி வெறுமனே கூட்டங்களைக் கூட்டிக்கொண்டிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பக்கலவி ஆசிரியருக்கான தேவை கணிசமாக இருந்தும், தகுதி வாய்ந்த - ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் உயர் புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகள் இருந்தும் மிகவும் சொற்ப அளவினரே ஆரம்ப ஆசிரியர்களாக (தமிழ்மொழி மூல

தகுதிகாண்) நியமனம் பெற்றனர். இவர்களில் பெரும்பாலானோர் உயர்கலவியை பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டிருந்தவர்கள், சரியான நிர்வாகம் இருந்தும் உரிய நீதி வழங்கப்படாதது ஏன்?

தொண்டர் ஆசிரியர்களாக, நீண்ட நெடுங்காலமாக கடமையுணர்வோடு கடமை புரிந்தவர்களும் இங்கு கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது. காலத்தால் செய்த அவர்களது உதவிக்கு கலவி உலகு கடமைப்பட்டது. இவர்களுககு நியமனம் வழங்குவதற்கு ஈ.பி.டி.பி. எம்.பிககள் செயலூக்கத்துடன் செயற்பட்டனர். இது பாராட்டத்தக்கது.

இதேவேளை - தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது என்பதை அறிந்து, அறிந்து புதியவர்கள் தம்மையும் தொண்டர் ஆசிரியர்களாக இணைத்துக் கொண்டனர். அடுத்த கட்ட தொண்டர் ஆசிரியர் தரவுப்படுத்தலில் இவர்களது பெயர்களும் "பல வருட அனுபவத்தோடு" சேர்ந்து கொண்டது.

முதல் தடவையில் நியமனம் வழங்கப்படாது விடினும் இரண்டாம் கட்ட நியமனத்தினை நம்பிக்கையோடு எதிர்பார்த்தனர். ஆரம்பக்கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் எனினும் "பல வருட அனுபவத்தோடு" புதியவர்கள் பலரது பெயர்களும் தொண்டர் ஆசிரியர் பட்டியலில் இடம்பெற்றதாலோ? என்னவோ? ஆரம்பக்கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோரது நியமனமும் இதனால் பாதிக்கப்பட்டது. அது மட்டுமலலாது "பல வருட அனுபவத்தோடு" புதியவர்களது பெயர்களின் இடைச்செருகல், நீண்டகாலமாகத் தொண்டர் ஆசிரியராக இருந்து வந்தோரையும் பாதித்தது; பாதிக்கிறது. அவர்கள் தொடர்ந்தும் அதே நிலையில் தான் உள்ளனர்.

க.அருமைத்துரை
நல்லூர்

மேலும், தற்போது நடைபெற்ற தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோர் நிரப்பப்படுமிடத்து ஏற்படும் மேலதிக ஆரம்ப ஆசிரியர் ஆளணித்தேவையைப் பூர்த்தி செய்ய, ஏற்கனவே தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆரம்பக்கல்வி ஆசிரிய நியமனத்திற்கு விண்ணப்பித்தோர்களில் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கின் ஓரளவு பரிகாரம் கிடைக்கும் அல்லவா!

ஆலயத் திருப்பணி வேலைகள் துரிதம்

சண்டிலிப்பாய்,ஜூன்15

சாந்தை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் பலலட்ச ரூபா செலவில் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீர்தக் கிணறு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் சண்டேஸ்வரர் சந்நிதானம், மடைப்பள்ளி ஆகியவும் அமைக்கப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (க-135)

கசிப்புக்கான 'கோடா' வைத்திருந்த

உரும்பிராய் பெண்கள் இருவருக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

கசிப்பு உற்பத்தி செய்வதற்கான 'கோடா' வைத்திருந்த குற்றத்திற்காக உரும்பிராயைச் சேர்ந்த இரு பெண்களுக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த பிரேமச்சந்திரன் கோகிலா என்பவரின் வீட்டிலிருந்து 2 ஆயிரத்து 160 கிராம் கோடா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இப்பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதமும் அபராதம் செலுத்தாது விட்டால் 6 மாத கடுழியச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என்று யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் சுபா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த தேவராஜா ஜயந்தி என்பவரின் வீட்டிலிருந்து ஆயிரத்து 80 கிராம் கோடா பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இந்தப் பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தாது விட்டால் 4 மாத கடுழிய சிறைத் தண்டனை வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-5)

3 புதிய லொறிகள் ப.நோ.கூ. சங்கங்களுக்கு!

குடாநாட்டில் உள்ள மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய லொறிகள் மூன்று கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

நீர்வேலி, வேலணை, கைதடி ஆகிய ப.நோ.கூ.சங்கங்களுக்கு இந்த லொறிகள் வந்து சேர்ந்துள்ளன.

இந்த லொறிகளுக்கு உடற்கோப்பு அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-17)

வன்னிக்கு 18 'பரல்'களில் எரிபொருள்

வவுனியா,ஜூன்15

ராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கு இன்று வெள்ளிக்கிழமை 18 'பரல்'களில் எரிபொருள், 300 பெட்டிகளில் மலத்தியோன் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.யோகநாதன் தெரிவித்தார்.

எரிபொருள் அங்குள்ள வைத்தியசாலைகளின் தேவைக்காகவே அனுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. இவை அகதிகளுக்கான ஐநா. உயர் ஸ்தானிகராலய வாகனத்தில் எடுத்துச்செல்லப்படவுள்ளன.

இவற்றுடன் மருந்து தெளிக்கும் 15 கருவிகளும் அனுப்பி வைக்கவும் அனுமதி கிடைத்துள்ளது என்றும் -

கடந்தவாரம் ஒருதொகை மருந்து வகைகள் வன்னிப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்றும் அவர் கூறினார். (க)

மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்15

அளவெட்டி அருணோதயக் கல்லூரி பழைய மாவணர் சங்கத்தின் கனடாக் கிளையின் 'பூச்சொரியும் பொன்னொச்சி மரம்' என்னும் மலரின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அருணோதயக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் கி.மகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் யாழ்.பல்கலைக்கழக உயர் பட்ட ஆய்வுப்பீட பீடாதிபதி பேராசிரியர் அசண்முகதாஸ் கலந்துகொண்டு நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நூலின் ஆய்வுரையை சமய நோக்கில் சைவப் புலவர் சு.செல்லத்துரையும், சமூக நோக்கில் திருமதி கோகிலா மகேந்திரனும், கலை நோக்கில் கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்கள். (க-152)

தெய்வீக ஸ்தலங்களில்



இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன்கோயில் கர்பாலய அழகுத் தோற்றமும், புதிய சிறிய தேரில் விஸ்வேஸ்வர சுவாமி பவனி வரும் காட்சியையும் படத்தில் காணலாம். (ஜ)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த 4ஆம் திகதி வெகு சிறப்பாக இடம்பெற்றது. பஞ்சமுக விநாயகர் தேரில் ஆரோகணித்து வலம்வருவதைப் படத்தில் காணலாம். (அரியாலை செய்தியாளர்)

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின்போது தொடர்ச்சியாகத் தெய்வீகப் பேருரை நிகழ்த்திய மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தத்தை விழா இறுதி நாளன்று தேவஸ்தான பரிபாலன சபையினர் பாராட்டிக் கௌரவித்தனர். ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு பொன்னாடைபோர்த்துக் கௌரவித்தபோது எடுத்த படம். (படம்: நல்லூர் செய்தியாளர்)

கண்ணீர் அஞ்சலி

அமரர் பசுபதி சோமசுந்தரம் (P.S)

எமது நிறுவனத்தின் சக ஊழியர்
திரு.சோ.தர்மகுணசிங்கம் (மாமா)
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் பசுபதி சோமசுந்தரம் (P.S)

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கௌரி அழகு மாடம்,
316, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (C/17098)

உரிமையாளர்,
சகஊழியர்கள்.

கண்ணீர் அஞ்சலி

அமரர் சோ.விமலசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச் சங்க சண்டிலிப்பாய் மத்திய கிளை 13இன் நீர்வாக உறுப்பினராகக் கடமையாற்றிய அமரர் சோ.விமலசிங்கம் அவர்களின் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கிளை 13,
தலைவர், செயலாளர், நிர்வாகசபை,
உறுப்பினர்கள், கிளைமுகாமையாளர்,
விற்பனையாளர்.
(89044)

S.L.A.S.

திறந்த போட்டிப் பரீட்சைக்கான
பயிற்சி வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம் :- 16.06.2001 பி.ப. 1.30 மணி
ஆசிரியர்:- அ.குமாரவேல்
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
(89013)

நன்றி நவிலல்

கடந்த 12-06-2001 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

திருமதி தம்பிமுத்து சரஸ்வதி

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

"சாந்தபுரி" திருமதி சாந்தா சிற்றம்பலம் (மகள்)
மயிலணி, திரு.ம.சிற்றம்பலம் (மருமகன்)
சுன்னாகம் (89052) (சேவையர்)

இடம்மாற்றம்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தால் க.பொ.த. (உயர்தரம்) ஓகஸ்ட் 2001 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கும் வேலைப்பட்டறையும் எதிர்வரும் ஜூன் 16ஆம், 17ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற இருந்தது. இந்நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால வட இந்து மகளிர் கல்லூரிக்கு (புலோலி) இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (89014) -வணிக மாணவர் மன்றம்.

"பார் தெரியுது பறாளாயான் பதி; பக்தர் பணிந்து பாவ வினை அகற்றும் சந்நிதி"

நாளை (16-06-2001)

ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா

(89047) - சோழியூரான் -

அதிகரித்த கடல் வற்றுக் காரணமாக

நெடுந்தீவுத் துறைமுகத்தின் உள்ளே படகுகள் செல்வதில் சிரமங்கள்!

'குமுதினி'யை வெளியே நிறுத்த யோசனை

நெடுந்தீவு, ஜூன் 15

நெடுந்தீவு துறைமுகத்துள் ஏற்பட்டுள்ள அதிகரித்த கடல்வற்றுக் காரணமாக படகுகள் உள்ளே நுழைவது மிகவும் கஷ்டமாக உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் குமுதினிப்படகு தரைதட்டிச் சென்றே இறங்கு துறையைச் சேரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையால் படகின் அடித்தளம் சேதமடைந்தும் வருகிறது.

மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையிலான காலப் பகுதியில் துறைமுகத்தை ஆழமாக்கும் பணிகள் இடம்பெறுவது வழமையாகும்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக சுமார் 12 வருடங்களுக்கு மேலாக துறைமுகத்தை ஆழமாக்கும் பணிகளோ, பாறைகளை உடைக்கும் வேலைகளோ நடைபெறுவதில்லை.

துறைமுகத்தை ஆழமாக்கும் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அதிகாரிகளின் கவனத்திற்குக் கொடுக்கப்பட்டாலும், அது குறித்த நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறுவதாக இல்லையெனத் தெரிகின்றது.

இது குறித்துத் தொடர்ச்சியான மௌனம் நிலவுமெனில் குமுதினிப் படகைத் துறைமுகத்தின் நுழைவாயிலில் காணப்படும் ஆற்றுக் கட்டைகளுக்கு வெளியில் நிறுத்திப் பயணிகளைச் சிறிய படகுகளில் ஏற்ற வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும், இதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தற்போது நயினாதீவில் நங்கூரம் இடப்படும் குமுதினிப் படகு, கடல் வற்றின் காரணமாக அதிகாலை அங்கிருந்து நெடுந்தீவுக்கு புறப்படுவதில் பலத்த சிரமங்கள் உள்ளதாகவும் ஒரு சேவை பொதுமக்களுக்கு எவ்வித பயனுமற்ற முறையில் தினமும் இடம்பெற்று வருவதாகவும் —

குமுதினிப் படகை நெடுந்தீவில் நங்கூரமிட்டு அங்கிருந்து சேவையைத் தொடர்வதால் குமுதினியின் இயந்திரமும் ஓரளவு சீராக இருக்க முடியும் எனவும் பொதுமக்கள் கருதுகின்றனர்.

(க–111)

மானிப்பாய் ஆஸ்பத்திரியில்

நிரந்தர டாக்டர் இல்லாததால் நோயாளர் பெரிதும் சிரமம்

நவாலி ஜூன் 15

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு, நிரந்தர டாக்டர் ஒருவர் இல்லாதால் நோயாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இங்கு பணிபாற்றி வந்த வைத்திய அதிகாரி அண்மையில் காலமானதைத் தொடர்ந்து, உடுவில் அரசினர் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியரே மாலை நேரத்தில் மட்டும் பதில் கடமை புரிகின்றார்.

இதனால் காலையில் வரும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. (க–100)

நெடுந்தீவு ஆஸ்பத்திரி ஆயுள்வேத கைநழுவுமா?

நெடுந்தீவு, ஜூன் 15

நெடுந்தீவில் கட்டப்பட இருந்த ஆயுர்வேத வைத்தியசாலை கைநழுவிப்போய் விட்டதாக ஊர் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மணற்றுறைப் பகுதியில் இதற்கெனக் காணி சுவீகரிக்கப்பட்டுப் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவமும் இடம் பெற்றது.

ஆனால் குறிப்பிட்ட கட்டடத்தை மேற்குப் பகுதியில் அமைக்கவேண்டும் என எழுந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து நெழுவினிப் பகுதிக்கு அது மாற்றப்பட்டது. எனினும் அங்கு கட்டடம் கட்டுவதற்கான காணி கிடைக்கவில்லை. இந்த நிலைமையில் அதற்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பப் பெறப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

(க-111)

அரசு இராணுவத் தீர்வை நாடுவதாக நாம் கூறவில்லை

ஆயர்கள் ஜேர்மனியில் கூட்டறிக்கை

கொழும்பு, ஜூன் 15

இனப்பிரச்சினைக்கு, தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடுகிறதென நாம் ஒருபோதும் கூறவில்லை என ஆயர்கள் மல்கம் ரஞ்சித், இராயப்புஜோசப் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

லண்டனில் தாங்கள் பேசியதாக வெளியான செய்திகளை மறுத்து இரு ஆயர்களும் நேற்று முன்தினம் ஜேர்மனியிலிருந்து கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.

இருவரும் கையெழுத்திட்டு வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் ''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முன்னெடுப்புக்களில் அரசாங்கமும் புலிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும் என்றே கூறினோம்'' எனத் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

நாங்கள் கூறாத ஒரு விடயம் பத்திரிகைகளில் திரிபுபடுத்திக் கூறப்பட்டுள்ளதை அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

லண்டனில் தமிழ், முஸ்லிம் ஒன்றியங்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடத்தினோம். லண்டன் சென். ஜோர்ஜ் மண்டபத்தில் நடந்த இந்தச் சந்திப்பை அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்தது. ஆனால் இதுவொரு செய்தியாளர் மாநாடு அல்ல.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் இராணுவத்தீர்வை நாடுகிறதென நாங்கள் ஒருபோதும் கூறவில்லை. பின்னடைவு நிலையில் இருக்கும் பேச்சுவார்த்தை முன்னெடுப்புகளைத் தொடர இலங்கை அரசும், புலிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டுமென்றே கூறினோம் இதற்குப் பதிலாக பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையும், புரிந்துணர்வும் ஏற்படும் சமிக்ஞை கிடைக்கவில்லை என எடுத்துரைத்தோம்.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள், இலங்கையில் சமாதானம் ஏற்பட ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென அவர்களிடம் கேட்டுக் கொண்டோம்.

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கு முடிவுகண்டு, நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அனைத்து மக்களும் நிம்மதியாக வாழ உழைப்பதே எங்களது குறிக்கோள்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(க)

ஊர்காவற்றுறையில் படகில் இருந்து

இந்திய மீனவரின் தங்கச் சங்கிலி நீதிவான் முன்னிலையில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஊர்காவற்றுறையில் கடற்படையினரின் பாதுகாப்பில் இருக்கும் தமது படகில், வைக்கப்பட்டிருந்த 9 பவுண் நிறையுடைய சங்கிலி மற்றும் மோதிரத்தை இந்திய மீனவர் ஒருவர் நீதிவானின் உதவியுடன் மீட்டுள்ளார்.

ஏனைய மீனவர்களுடன் நெடுந்தீவுக் கடலில் வைத்து கடற்படையினரிடம் சிக்கிய இந்த மீனவர் தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் மோதிரத்தையும் படகில் மறைத்து வைத்திருந்தார்.

யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இவர் ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் சு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது மேற்படி விடயம் தொடர்பாக பிரஸ்தாபித்தார்.

நீதிவான் குறிப்பிட்ட மீனவருடன் மேலும் ஒரு மீனவரையும் அழைத்துக் கொண்டு கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறையில் படகுகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்குச் சென்றார்.

அங்கே குறிப்பிட்ட மீனவர் தமது படகை அடையாளம் கண்டு அதற்குள் தன்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கச் சங்கிலி மற்றும் மோதிரத்தை மீட்டுவந்தார்.

இந்த நகைகள் தற்பொழுது நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருப்பதாகவும், மீனவர்களை விடுவிக்கும் போது உரியவரிடம் கையளிக்கப்படும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

(க-5)

அவனன்றி ஓர் அணுவும் அசையாது!

மனித வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது முப்பது வருடம் வாழ்ந்தவருமில்லை. முப்பது வருடம் கெட்டவரும் இல்லை என்று சொல்லுவார்கள். அதாவது மனித வாழ்க்கையில் வறுமையும், செழிப்பும் என்றைக்கும் நிரந்தரமானதல்ல என்பது இதன் பொருள். அதாவது வாழ்க்கையில் எந்தவொன்றுக்கும் முதலும் உண்டு, முடிவும் உண்டு. கஷ்டம் என்

ஞானக் கதிர்

பது சாலம் நடத்திக் காட்டும் சோக நாடகம். இந்த நாடகத்தில் ஆரம்பத்தில் தோல்வி ஏற்பட்டாலும் காலப் போக்கில் வெற்றி பெறலாம். யாருக்குமே நிரந்தர வெற்றியுமல்ல நிரந்தரத் தோல்வியுமல்ல. எல்லாமே சமத்துவம் என்பது தான் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம். உண்மையாகலாம் நிரந்தரமாகலாம் ஆனால் வாழ்க்கைக்கு வழிகாட்டுமா என்பது இன்னொரு கேள்வி.

நிச்சயமாக வழிகாட்டும் முன்னோர்கள் சொல்விச் சென்றதத்துவங்களை முழுமையாக உணர்ந்து கொண்டால் அல்லது அதன்படி நடந்து கொண்டால் மூத்தோரின் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் புறக்கணிப்பதால்தான் துன்பம் தானே விரும்பி நம் வாசலுக்கு வருகிறது. நாமாக அழைத்த ஒன்றை நாமாகவே உடனடியாக விரட்டமுடியுமா? முடியாது. வந்ததை அனுபவிக்கத்தான் வேண்டும். சில காலம் துன்பத்தில் வாழத்தான் வேண்டும். இதன் பின்னர் தான் ஒரு விடிவுகாலத்தை எதிர்நோக்க முடியும். விடிவு என்பது எப்படி வருகிறது? நம் செயல்களைப் பொறுத்தே அமைகிறது. துன்பம் தருவதை யெல்லாம் விலக்கி வைத்தால் இன்பம் தானாகவே வந்துவிடுகிறது. இன்பமோ துன்பமோ இவற்றுக்கெல்லாம் நாம் செய்யும் அடிப்படைச் செயல்களே காரணமாகின்றன. இன்பத்தை முழுமையாக அனுபவிக்கும் போது மனிதனுடைய கண்களுக்கு யாருமே தெரிவதில்லை. உடன் பிறந்தவர்கள் கூட நினைவுக்கு வருவதில்லை. ஆனால் துன்பம் வரும்போது மட்டும் அவனுக்கு ஞானோதயம் பிறந்து விடுகிறது. இறைவனை அவன் வேண்டுகிறான்.

துன்பம் நேர்வது முற்பிறவியில் செய்த தீவினைகளின் பயனே என்றாலும் துன்பத்தின் அளவையும் கடுமையையும் குறைத்து அதை ஏற்கும் மனப்பக்குவத்தை இறையருள் நமக்கு வழங்குகிறது. இவ்வாறு துயரைத் தொடர்ந்து தடுத்து அடைத்து அல்லல்களை நீக்கி அருள் சுரக்க இறையருள் மிக அவசியம். திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு சமணர்கள் பல துன்பங்களைச் செய்த போதும், மனந்தளராது அவர் இறைவனை வேண்டி தேவாரம் பாடியதால் இறைவன் அருளால் அவர் துன்பம் நீங்கப்பெற்றார். இவரின் வரலாற்றின் மூலம் இறையருளை உணரலாம். இதன் வழி கரையேறியவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். வந்த துன்பத்தையும், வருகின்ற துயரத்தையும் வடிகட்டி எடுத்து தடுத்து நிறுத்தும் சக்தி அவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு. எத்தனை நாள் துன்பத்தை அனுபவிக்க வேண்டும், எத்தனை நாள் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பதை அவன் ஒருவன் மட்டுமே தீர்மானிக்கின்றான்.

மனிதனைப் படைப்பதும் காப்பதும் அருள்வதும் இறைவன் தானே?

அவனன்றி ஓர் அணுவும் அசையாதே? இந்த நிலையில் தங்களால் தனித்து இயங்க முடியும் என்று சொல்லிக் கொள்ளும் மனிதர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு வாழ்க்கையில், பெரிய துன்பம் வந்தால் தான் 'ஐயோ கடவுளே' என்பார்கள்; கடவுளைத் தேடுவார்கள். இத்தகைய மனிதர்களுக்கும் இறைவன் உதவத் தயாராய் இருக்கின்றான். காரணம் அவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன். எல்லோருக்கும் பொதுவானவன். எமக்கு மேற்பட்ட சக்தியே இறைவன் அவனுக்கு யாம் கட்டுப்பட்டு நடக்கும் போது வேண்டிய நேரம் கைகொடுப்பான்.

★

தொகுப்பு: க. சிவசங்கரநாதன்

சொல்ஹெய்மை ஓரங்கட்டுவது தீர்வு முயற்சியைப் பாதிக்கும்

வை. கோபால்சாமி எச்சரிக்கை

சென்னை, ஜூன் 15

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஓரங்கட்டுவது இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்று மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி செவ்வாய்க்கிழமை தெரிவித்திருக்கிறார்.

மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் நேரத்தைச் செலவிட்டு அவர்களின் கருத்துக்களை அறிந்திருந்தவர் சொல்ஹெய்ம். இந்தத் தருணத்தில் அவரை ஓரங்கட்டுவது சமாதான நடவடிக்கைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக விடுதலைப் புலிகள் மூன்று மாத காலம் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்தனர் ஆனால் ஆரம்பத்தில் இராணுவ ரீதியான தேவையே இலங்கை அரசு தேர்ந்தெடுத்தது. சீனா, இஸ்ரேல், பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றது. யாழ்ப்பாணத்தை இராணுவ ரீதியாகக் கைப்பற்ற முடியாதென்ற நிலைமையில் பேச்சுவார்த்தையை நாடியது.

தமிழர் பிரச்சினைக்கு எதிராகவும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்குமாறு சகல நாடுகளுக்கும் இலங்கை நெருக்குதல் கொடுத்துவந்தது. இந்திய அரசு மட்டுமே இந்த அழுத்தத்துக்கு செவிசாய்க்கவில்லை.

காங்கிரஸ் அரசாங்கங்கள் கடந்த காலத்தில் செய்தது போன்றல்லாமல் தற்போதைய இந்திய அரசாங்கம் இந்த விவகாரத்தில் தலையிடவில்லையென்று வை. கோ. மேலும் கூறியுள்ளார்.

(க)

சின்னஞ்சிறு விளம்பரம்

DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/16990)

விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள **10H.P** மாருதி டீசல் எஞ்சின் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு த.பரராஜசிங்கம், காமாட்சியம்பாள் கோயிலடி, நீர்வேலி. (89041)

ஒரு காதலின் கதை

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் பற்றி அறிய வேண்டுமா? 325 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை ஒரு சொழும்பு வார மலரில் எழுதும் தொடர் கதையின் இவ்வாரக் கதையை வாசித்துப் பாருங்கள். (88970)

படிவம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மனிதவள வங்கியில் பதிவு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி: 2001-06-25. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C/17025)**

நாளை வியாழமாற்றம்

திருக்கணித பஞ்சாங்கப்படி நாளை (16.06.2001) வியாழமாற்றம் நிகழ்கின்றது. வாக்கியப்படி (13.06.2001) வியாழ மாற்றமடைந்தது. வியாழமாற்றப் பலன்கள் ரூ.10/=. எங்கும் விற்பனையாகின்றன. கணிப் பாசிரியர் - சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. **T.P.** 021-2753. (89046)

தவறிவிட்டது

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி எனும் முகவரியுடைய சோதிலிங்கம் கமலேஸ்வரன் என்பவருடய தேசிய அ.அ. (இல. 751461178v), விசேட அ.அ. (இல. 0909022325), இராணுவ அனுமதிப்பத்திரம் என்பன யாழ். பஸ் நிலையப்பகுதில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அ.கோபாலராஜன், சாமுவேல் அன்சன்ஸ், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.(89054)

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள (கடைக்குத் தேவையான) 6 அடி நீளம், **31/2** அடி உயரம், 3 தட்டுக் கொண்ட சோக்கேஸ் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:103, கோயில் வீதி, **I.C.R.C.** சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். (89042)

கனிஷ்ட மாணவருக்கான உதைபந்தாட்டம்

அச்சுவேலி, ஜுன்15

12 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி கல்வி வலய மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடைபெறவுள்ளது.

போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ். கல்வி வலய உதைபந்தாட்ட அபிவிருத்திச் சங்கம் செய்துள்ளது. போட்டிகளுக்கான விண்ணப்ப இறுதித் தினம் நாளை 16ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

காணாமற்போன இருவரும் ஈ.பி.டி.பியில்

யாழ்ப்பாணம்,ஜுன்15

நீர்வேலி மற்றும் காரைநகர்ப் பகுதிகளில் இருந்து காணாமற்போன இரு இளைஞர்கள் ஈ.பி.டி.பியில் இருப்பதாக அவர்களது தாய்மாரினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.கிளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 7ஆம் திகதி காணாமற்போன நீர்வேலி வடக்கைச் சேர்ந்த அரியகுட்டி சுரேஷ், ஏப்ரல் 25ஆம் திகதி காணாமற்போன காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த வரதராசா திருவரங்கன் ஆகியோரே ஈ.பி.டி.பியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-5)

இந்திய மீனவர்களை சந்தித்தார் ஆயர்

யாழ்ப்பாணம்,ஜுன்15

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை யாழ். ஆயர் வண.பிதா தோமஸ் சௌந்தரநாயகம் நேற்று சந்தித்து உரையாடினார்.

ஆயருடன் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட் தந்தையர் சிலரும் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர். (க-5)

சங்கீத சபைச் சான்றிதழ்கள்

தென்மராட்சி,ஜுன்15

வட.இலங்கை சங்கீத சபையினால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட அழகியல் கல்விப் போட்டிகளில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் அந்தந்த தபால் நிலையங்களுகுகு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களின் சான்றிதழ்கள் கரவெட்டியில் இயங்கும் அந்தந்த தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ளாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

கருத்தரங்கு

மாதகல் கிழக்கு காந்திஜி சன சமூக நிலையத்தில் மது ஒழிப்புப் பற்றிய பிரசாரக் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

25ஆவது பிறந்த நாள் வாழ்த்து

15-06-2001

HAPPY BIRTHDAY

செல்வன் இராஜரட்ணம் பிரபாகரன்

(ரஞ்சித்)

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

திரு.திருமதி வே.இராஜரட்ணம் (செல்வம்) – யோகராணி

தம்பதிகளின் செல்ல மகன்

பிரபா

தனது 25ஆவது பிறந்த நாளை இன்று (15-06-2001) வெள்ளிக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் நண்பர்களுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசைத் தங்கைகள்~ அனித்தா, அஜந்தா, ஜெயா குடும்பம், ராஜா குடும்பம், சுரேன் குடும்பம் (மாத்தளை), பெரியப்பா குடும்பம், மாமாமார், அத்தைமார், மருமக்கள் (மாத்தளை), மச்சான்மார், மச்சாள்மார் (கொழும்பு), மாமா குடும்பம், கன்னாதிட்டி நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரும் குழந்தை யேசுவின் அருளால் பல்கலையும் பெற்று நீடூழி காலம் சீரும் சிறப்புமாக வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

No.19, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (89043)

வே.இராஜரட்ணம் (செல்வம்) *(தகப்பன்)*

வலி. தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.

காணி கொள்வனவு

மானிப்பாய் - சுந்திப்பனை

மேற்படி விடயம் தொடர்பாக மானிப்பாய் பகுதியில் "சுந்திப்பனை" **(MANIPAY TOWN - VSW - SUNTHIPANAI)** நிலப்பரப்பு 5உம் குளி 17,2 உம் பகுதி 1, பகுதி 11 ஆக மானிப்பாய் நவீன சந்தை விஸ்தரிப்புக்காகக் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

மேற்படி காணி உரிமம் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் உடன் 22.6.2001இற்கு முன் "தலைவர், வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் " எனும் முகவரிக்கு எழுத்து மூலமோ/நேரிலோ தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆதன விவரம் வருமாறு:-

ஆதன இலக்கம்:- 14:14/1

ஆதன விவரம் :- 14 - வேய்ந்த உறைவிடமும் நிலமும் 14/1வளவு

வீதி :- மானிப்பாய் அட்கிரி வீதி

வட்டாரம் :- 07

பெயர் :- காணி உரிமையாளா திரு.வி.மகேசன்.

வெ.அ.ஜோன்சன *(ஜே.பி.யு.எம்.)*
தலைவர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (C-17100)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரதி பிராந்தியப்பணிப்பாளர் வலயம் 4.

ந.யோகராஜன்

J.P. (ALL_ISLAND)
B.A., P.G. Dip. in Edu. & Dip. in Tech.Edu.SLTES

புண்ணியங்கள் நிறைந்தோங்கும் உரும்பிராயூர்ப்
புகழ் பெற்ற செம்மல்நவ ரத்தினத்தின்
வண்ணமுயர் மைந்தனே யோகராசா
மாண்புதரு பெயர்படைத்த வள்ளலே, நம்
திண்ணிய யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கோர்
தீபமெனப் பணிப்பாளராக வந்தாய்
கண்ணியநின் தொழில்சிறந்து சுகம் சிறந்து
கதிரவன்போல் பல்லாண்டு வாழி வாழி
என வாழ்த்துகின்றோம்.

ந.நடராசா குடும்பம் (பன்னாலை)
சீ.பாலகுமாரன் குடும்பம் (நீர்வேலி).

(89055)

கலைகளை வளர்ப்போம்!
கலை இன்பம் பெறுவோம்!

அவைக்காற்றுகைக் குழு சுன்னாகம்

மானிப்பாய் தர்மரூபன் பல்பொருள் வாணிபம், தொலைத் தொடர்பு சேவை நிறுவன அனுசரணையுடன் நடத்தும் VIDEO PROJECTOR இணைந்த

நாடக பாட ஆற்றுகை "ஹாம் லெட்"

பழிக்குப்பழி வாங்கும் மிகச்சிறந்த துன்பியல் காவியம்

விருத்தியாக்கம் :- வை.மா.அருள்சந்திரன்

இடம் :- யா/ இராமநாதன் கல்லூரி

காலம்:- 17.06.2001 ஞாயிறு காலை 10.30 மணி (புதியநேரம்)

நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

யாழ். முன்னணிக் கலைஞர்கள் பங்குகொள்கின்றனர்.
ஆற்றுகை ஒரேயொரு தடவை மட்டுமே!
காணத்தவறாதீர்கள்!
ஆற்றுகை தொடர்பான கையேடு ஒன்றும் பெற்றுக்கொள்ளலாம்.

அன்பளிப்பு:-
பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் ரூபா 30/=
ஏனையோர் ரூபா 50/=

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

பட்டப்படிப்புகள் கல்லூரி

(C-17101) யாழ்ப்பாணம்.

மனதார வாழ்த்துகின்றோம்

தீவகத்தின் அபிவிருத்தி கருதி எம்மை நியமனம் செய்த மாண்புமிகு அமைச்சர் கௌரவ

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர்

திரு.N. மதனராஜா

அவர்களையும்

திரு. காந்தன் தோழர்

அவர்களையும், உளமார வாழ்த்திப் பெரு உவகையுடன் நன்றி கூறுகின்றோம்.

போதனாசிரியர்கள்,
அபிவிருத்தித் தொண்டர்கள்,
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகப்பிரிவு,
ஊர்காவற்றுறை.

(89053)

நூல் அறிமுக நிகழ்வு

குருநகர்,ஜுன்15

யாழ்.திருமறைக் கலாமன்றமும் யாழ்.மறைக்கல்வி நிலையமும் இணைந்து நடத்தும் நூல் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். மறைக கல்வி நிலையத்தில் நடைபெற உள்ளது.

அருட்திரு.ஞா.பிலேந்திரன் அடிகளார் எழுதிய 'கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்' எனும் நூல் அங்கு வெளியிட்டு வைக்கப் படும்.

மறையாசிரியர் எஸ்.எவ்.சவுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு நிகழ்வில் வரவேற்பு ரையை ஜீ.பி.பேர்மினசும் ஆசியுரை யையும் வெளியீட்டுரையையும் யாழ். மாவட்ட குரு முதல்வர் ஜே.பி.ஈ. செல்வராசா அடிகளாரும், மதிப்புரை யை அருட்திரு. அ.ஜெயசேகரம் அடிகளாரும், ஏற்புரையை நூலாசிரிய ரும் வழங்குவர். (ஐ-51)

பாடசாலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுன்15

முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடா பாக மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலைகளில் நடத்தி வரும் கருத் தரங்குத் தொடரில் இன்று வெள் ளிக்கிழமை யாழ்.கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு கருத்தரங்கு இடம்பெறவுள் ளது. (ஐ-3)

செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக் காலச் செயலமர்வு நாளை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெறுமென வலயக் கல்விப் பணிப் பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

தமிழ் விழா

நாவாந்துறை றோ.க. வித்தியா லயத்தின் தமிழ்விழா இன்று வெள் ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.இராஜகோ பால் பிரதம விருந்தினராகவும் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர்(தமிழ்) எம்.எஸ்.சிறிதயாளன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொளவர். (ஐ-3)

தொடர்பு கொள்ள கோரிக்கை

கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த திருமதி தாமோதரம்பிள்ளை பாக் கியம், சாவகச்சேரி சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி நடராசா ஜெயகுமாரி, கந்தரோடையைச் சேர்ந்த செ.செல்வரத்தினம் ஆகியோரைத் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொளளுமாறு செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு கோரிக்கை விடுத்துள் ளது. (ஐ3)

கிளி/மாவட்ட பல்கலை மாணவர்கள் கல்வி வளர்ச்சி நிதிக்காக

பருத்தி நகர் சாண்டோ M.துரைரத்தினத்தின் மாணவன் விஜயமோகனின்

வீரதீர சாகசச் செயல்கள்.

இடம்: பல்கலைக்கழக மைதானம்.
நாள்: நாளை (16.06.2001) சனிக்கிழமை.
நேரம்: மாலை 2.30 மணி - 4.30 மணி வரை.
பிரவேசக் கட்டணம் 30/- மட்டுமே!

(89070)

மரண அறிவித்தல்கள்

திருமதி லூக்கேஸ்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை *(சொர்ணம்மா)*

இல.3, புதுவீதி கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி லூக்கேஸ்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை (சொர்ணம்மா) நேற்று (14.6.2001) வியாழக்கிழமை காலை காலமானார். இவர் லூக்கேஸ்பிள்ளையின் (நல்லையா) அன்பு மனைவியும், லீலா, அருமைத்துரை (கொழும்பு), சுசீலா, லலிதா (மன்னார்), வைமன்துரை (வைமன் ஸ்ரோர்ஸ்), அன்ரன் விமலதாசன் (ப.நோ.கூ.ச.யாழ்), யெலா ஆகியோரின் அன்புத்தாயாரும், பொன்கலதாஸ், பாமா, சிவா, ஜெரால்ட் (கச்சேரி, மன்னார்), லலிதா, ஜெனற் விமலதாசன் (ஆசிரியை O.L.R. பாடசாலை), புஸ்பகுமார் (கிருஷான் பேக்கரி) ஆகியோரின் அன்பு மாமி யாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.06.2001) வெள்ளிக்கிழமை மாலை 3.30 (பு.நே.) மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலிப் பூசையின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்.

தகவல்:
வைமன்
(மகன்)

(89058)

கந்தையா அருளம்பலம்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருளம்பலம் நேற்று (14.06.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின் னாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சீவரத்தினம் (ஸ்ரீ, கனடா), சிவஞானம் (ரதி, சுவிஸ்), சிவ குமாரி (கனடா), சாந்த்குமாரி (ஜேர்மனி), சறோஜினிதேவி (கொழும்பு), தயாநிதி ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவநாயகி (கனடா), சறோஜினி தேவி (சுவிஸ்), பாலசிங்கம் (கனடா), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), கந்தவனம் (கொழும்பு), வைகுந்தவாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் முரளிதரன், பிரசன்னா, பிரணவன், காண்டீபன், காமினி, அனுசா, விஜிதா, சசிதீபன், பகீரதன், தர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிதம்பரப்பிள்ளை, தம்பிராசா, ஜெயராசா, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2001) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
அ.சிவக்கொழுந்து
(மனைவி)

(89048)

திருமதி மார்க்கண்டு மாணிக்கம்

ஐயனார் கோயிலடி மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மாணிக்கம் நேற்று (14.06.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், செ.லோகேஸ்வரி, இ.லோகராணி, ஈ.லோகசவுந்தரி, ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராசா, இந்திரராசா, ஈஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்னம்மா, குட்டிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சியாமளா, மயூரன், காலஞ்சென்ற உமையாளன் மற்றும் றமணன், பிறேமளா, செந்தூரன், சர்மிளா, மணிவண்ணன், சபரிதா, கனுசியா, சௌமியா, சபரிதன், விஜயகிருஷ்ணன், கோமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அருணனின் அன்புப். பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

தகவல்:
இந்திரராசா
(மருமகன்)
(இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.)

(89048)

செல்லன் சின்னக்கிளி (கஸ்ரோ)

(முன்னாள் ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

சந்தைவீதி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் நிற்சாமம் சங்கா னையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சின்னக்கிளி (கஸ்ரோ, முன்னாள் ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்) புதன் கிழமை (13.06.2001) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லன் - பூரணம் ஆகியோரின் பாசமிகு மகனும சின்னம்மாவின் அன்புக்கணவரும் சவுந்தரராசா, பாமா, கலாதேவி, கண்ணதாசன் (இத்தாலி), கௌரி, ஜெயபாரதி (கனடா), கிளிரூபன் (கொலணட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவேந்திராதேவி, பரராஜசிங கம் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்.), ஞானசேகரம் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்.), உமா (இத்தாலி), சந்திரகுமார் (இலங்கை மின்சார சபை), சவுந்தரராசா (கனடா) ஆகியோரின் மாமனாரும் கபிலன், ரவிவர்மன், விபூசனா, நிலோஜினி, நிலோசன், குயிந்தினி, பிரசாந்தன், லக்சிகா, தனூசன் (கனடா), தனுசியா (கனடா), கஸ்தூரி, கார்த்திகா, சிவசங்கர், கவிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக னக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம்,
சங்கானை.

தகவல்:
சி.சவுந்தரராசா
(மகன்)

(89069)

வாழ்த்துகிறோம்

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாக தெரிவாகிச் சுதுமலைக்கும், அங்குவாழும் மக்களுக்கும் பெருமை சேர்க்கும்

கிரியா கலாப முக்தாமணி

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்

(பிரதம குரு, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் ஆதீன குரு, நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்)

அவர்களை எல்லாம்வல்ல ஸ்ரீ புவனேஸ்வரித் தாயை வணங்கி வாழ்த்துகின்றோம்.

சுதுமலை,
மானிப்பாய்.

அம்பாள் விளையாட்டுக் கழகம்,
சுதுமலை.

(89057)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

ஆதனவரி அறிவித்தல் - 2001

2001 ஆம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 02.07.2001 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2001 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252, பிரிவு XII, 252(1)இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக் கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர், 'மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்'. எனஎழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(13.06.2001)

சி.வே.குலநாயகம்,
பதில் மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/17105)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்
பிரபுதேவா, சரத்குமார், ஐஸ்வர்யா, கபாலி, விவேக் மற்றும் பலர் நடித்த

பெண்ணின் மனதைத் திருட்டு

தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
20.06.2001 முதல்

சிட்டிசன்

(C/17066)

நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

வானவில்

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(89064)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 15.06.2001 - 25.06.2001 பிற்பகல் 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 26.06.2001 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி:- 27.06.2001 பிற்பகல் 3.00 மணி

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

வேலையின் விவரம்	மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப்பணம்	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் (வி.ஊ.வ.உட்பட)
01. வெட்டுக்கட்டைப்பிள்ளையார் கோயில் வீதியும் அதனோடு இணைந்த வீதிகளும் கற்களிட்டு தாரிடல்	10720.00	281.25
02. இழுபொறி இயந்திரப்பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்துதல் 01.07.2001 தொடக்கம் 31.12.2001 வரையான காலப்பகுதிக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குப்பை கூளங்களை அகற்றுவதற்கு இழுபொறிஇயந்திரம் வாடகைக்கு அமர்த்துதல். (தன்னியக்க உயர்த்தி இருத்தல் வேண்டும்)	500.00	112.50
03. தளபாடம் செய்து வழங்கல்	600.00	112.50

ஏலவிற்பனை

வெற்றுப்போத்தல் 750மி.லீ.1200 போத்தல்கள் (வெள்ளை, கலர்)
வெற்றுத்தார் பெரல்கள் 80 எண்.

ஏலவிற்பனைத் திகதி - 25.06.2001

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை "தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள் ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத்தபா லிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- "இக்ராட்" நிறுவனத்தில் பதிவு செய்தவர்களுக்கு ஒப்பந்தப்பத்திரங்கள் வேலைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(C/17104)

க.கமலசேகரன், ஜே.பி.யூ.எம்.
தலைவர்.

மாகாண விளையாட்டுகள் ஒத்திவைக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜுன்15

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளுக்கு இடையில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் திருகோணமலையில் இடம்பெறவிருந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப் பற் போக்குவரத்து சீர்குலைந்ததையடுத்து யாழ்.மாவட்ட மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த விடயம் மாகாண சபை அதிகாரிகள் மட்டத்துக்குத் தெரியப் படுத்தியதை அடுத்து போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.கல்வித் திணைக்களம் தெரிவித்தது.

பெரும் விளையாட்டுக்கள் எதிர் வரும் 25 ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரையும் -

மெய்வன்மைப் போட்டிகள் ஜுலை மாதம் முதலாம் திகதிமுதல் 3 ஆம் திகதிவரையும் -

நடைபெறவிருக்கின்றன என்று யாழ்.பாடசாலைகள் விளையாட்டுக் குழு அறிவித்துள்ளது.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பயணம் செய்ய வேண்டிய திகதிகள் விரைவில் பாடசாலைகளுக்கு அறிவிக்கப் படும் என்றும் -

பயண அனுமதி பெறுவதற்காக 'றான்' அலுவலகத்துக்கு நாளை வரும்படி கேட்கப்பட்டிருந்த மாணவர்கள் அதற்கு நாளை வரத்தேவையில்லை என்றும் -

யாழ்.பாடசாலைகள் விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இதற்கிடையில் -

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக யாழ்மாணவர்கள் விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்ற முடியாதுள்ளதால் போட்டிகளைப் பிற்போட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா ஆகியோரைத் தாங்கள் தொடர்பு கொண்டு கேட்டதை அடுத்து போட்டிகள் பிற்போடப்பட்டதாக வட மாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் எஸ்.இராஜதுரை உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3)

யாழ் குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை அடுத்து படையினரும் விடுதலைப் புலிகளும் ஷெல் தாக்குதல்களில் ஈடுபட்டதாகக் குடாக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தெரிவித்தனர். (உ-3-6-15-51-139)

புலிகளிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவம், தனக்கு சாதகமாகக் கருதிய நவீன ஆயுதங்கள் ஒவ்வொன்றும் நாளடைவில் விடுதலைப் புலிகளின் வசமும் இருப்பது ஊர்ஜிதமாகி வந்துள்ளதைச் சுட்டிக் காட்டும் இராணுவ ஆய்வாளர்கள், தனது பலமாக இராணுவம் கருதி வந்த விமானப்படை, தற்போது விடுதலைப் புலிகளிடம் உள்ள நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் கடும் அபாயத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்தனர்.

- இப்படி அந்தச் செய்தி' நிறுவனம் மேலும் தெரிவித்தது. (உ-ஒ-10)

கணக்கீடு
முகுந்தன்
B.B.A. (HONS) F.M. SPL.
A/L 2003
தனிவியாபார முடிவுக்கனைக்கு
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்
பொருளியற் கல்லூரி
இணுவில்
BARATHY
சித்தன்கேணி
மூன்று இடங்களிலும்
ஆரம்பம் 16-06-2001 சன
(89067)

டாக்டர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை -

ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இவ்விடயம் குறித்து சுகாதார அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்தின, பிரதி சுகாதார அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன், சுகாதார அமைச்சுச் செயலாளர் திலக் ரணவிராஜா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.எம்.எல். வலிகஸ்வத்த ஆகியோருடன் நேற்றுச் சுகாதார அமைச்சில் கலந்துரையாடினார் என்றும் -

அதைத் தொடர்ந்து சுகாதார அமைச்சுச் செயலாளர் தொலைபேசி மூலம் யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி கனகரத்தினம் மற்றும் அரச வைத்தியர் சங்க யாழ். கிளைப் பிரதிநிதிகளுடன் இவ்விடயம் குறித்து உரையாடி இன்றைய மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தார் என்றும் -

மகேஸ்வரன் எம்.பி. நேற்று மாலை தெரிவித்தார்.

இதேவேளை-

வடக்கு - கிழக்கில் டாக்டர்களின் வேலைநிறுத்தம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. (உ-3-5-6-15-139)

கணக்கியல்
1st-In-Com-2001
✳ புதிய பிரிவு ஆரம்பமாகிறது.
✳ ஏற்கனவே கற்காத மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
திரு.S.D.J.சுதர்ஷன்
ஆரம்பம்: 17.06.2001 ஞாயிறு
9 - 11 (பழைய நேரம்)
BEACON
வெலிங்டன் சந்தி (89021)

தடையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய கட்டாயத் தேவை குறித்து அமைச்சர்கள் பலரும் பிரஸ்தாபித்ததாகவும் -

அந்த விடயம் விரிவாக ஆராயப்பட்டதாகவும் - அவர் சொன்னார்.

ஐ.தே.கட்சி அரசுக்கு எதிராகக் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தும் அங்கு ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது. (உ-3)

பிந்துனு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் குறுகிய காலத்தில் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்க முடியும் என்றும் -

சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிந்துனுவெவப் படுகொலைகள் தொடர்பான குற்றப் புலனாய்வுப் பொலீஸாரின் விசாரணைகள் ஏற்கனவே பூர்த்தியாகி விட்டன. அது தொடர்பான அறிக்கையும் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் படுகொலைகள் செய்யப்பட்டது தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பிந்துனுவெவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் அபேரட்ன, சம்பவதினம் கத்திகள், பொல்லுகளுடன் வந்த குண்டர்கள் தமிழ்க் கைதிகளைத் தாக்கிக் கொன்றபோது, ரி56 துப்பாக்கிகளை வைத்திருந்த பொலீஸார் வாளாவிருந்ததாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-10)

தடையை நீக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பதிலை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் -

அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அநேகமாக ஜுலை மாதத்தின் முதல் வாரத்தில் இந்தத் தடைநீக்கம் தொடர்பான அறிவித்தல் வெளியாகக்கூடும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை -

தடைநீக்கம் தொடர்பான அறிவிப்புக்கு முன்பு, தனிநாட்டுக் கோரிக்கை மற்றும் வன்செயல்கள் ஆகியவற்றைக் கைவிடுவது போன்ற விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளிடமிருந்து ஒரு பொது அறிவித்தலை இலங்கை அரசு எதிர்பார்ப்பதாக அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தீவிர போக்குக் கொண்ட சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே இலங்கை அரசு விடுதலைப் புலிகளிடம் இருந்து இவ்வாறான அறிக்கை ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்ததாக தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் அறிவித்தது. (உ-10)

யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லெண்ணத்துக்குமான மக்கள் குழுவைச் சந்தித்து யாழ்.மாவட்ட நிலைமைகள் தொடர்பாக உரையாடிய போதே யாழ்.ஆயர் இவ்வாறு கூறினார்.

மக்கள் குழுவின் தலைவர் டி.ஆர். அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் டாக்டர் வி.தியாகராசா, வண. பிதா ஒ.ஐ.பேர்ணாட், ஆயர் இல்ல குரு முதல்வர் ஜே.பி.ஈ. செல்வராஜா, எஸ்.செபநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நெதர்லாந்து தூதரக அதிகாரிகளிடம் யாழ். ஆயர் மேலும் கூறியதாவது:-

தொடரும் யுத்தத்தினைத் தாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். நெதர்லாந்து இந்த விடயத்தில் போதிய பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு இன்று சமாதானமே தேவையாக இருக்கிறது. எனவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டு மக்களுக்கு சமாதானத்தை கிட்டச் செய்ய வேண்டும். இதுவே மக்கள் எல்லோரதும் வேண்டுகோளாகும் - என்று கூறினார். (உ-5)

கிழக்குப் பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விடுத்த களநிலைவரம் பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வந்தாறுமூலைப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் இடம்பெற்றது.

மோதலின் பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர், நிலத்தில் சிந்தியிருந்த இரத்தக் கறைகள் கிழக்கு பல்கலைக்கழக வளாகத்துக்குள் செல்வதை அவதானித்தனர்.

அதனால் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அனுமதி பெற்று, உள்ளே படையினர் தேடுதல் நடத்தினர்.

அப்போது பல்கலைக்கழக மல சலகூடத்துக்குள் மறைந்திருந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் இராணுவத்தினரிடம் எதிர்ப்பின்றி சரணடைந்தார்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் ஆர்.பி.ஜி.சார்ஜர் ஆகியவற்றையும் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து படையினர் கண்டெடுத்தனர்.

இதேசமயம் மோதல் நடந்த பகுதியில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலத்தையும், ரி-81 மற்றும் ரி-56 ரகத் துப்பாக்கிகள் தலா ஒவ்வொன்று, இயந்திரத் துப்பாக்கி ஒன்று, ஆர்.பி.ஜி. தோட்டாக்கள் ஆகியவற்றையும் படையினர் மீட்டனர்.

இவ்வாறு விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. படையினர் அனுமதி பெற்று தேடுதல் நடத்தியதை ஊர்ஜிதப்படுத்தியுள்ள பல்கலைக்கழக வட்டாரங்கள் சடலமோ, ஆயுதங்களோ, இராணுவத் தளபாடங்களோ பல்கலைக்கழக பிரதேசத்தில் இருந்து படையினரால் மீட்கப்படவில்லை எனத் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது.

படையினரின் நேற்றைய தேடுதல் நடவடிக்கையால் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன.

அப்பிரதேசத்திலிருந்து படையினரால் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் புலி உறுப்பினரின் சடலம் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகள் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-ஒ-10)

கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை வரை பஸ்ஸில் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர்.

காலநிலை சீரின்மையால் இச்சேவை நேற்று நடைபெறவில்லை என்றும் -

இச்சேவை இன்று நடைபெறும் என்றும் -

நேற்று மாலையில் அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இக்கப்பலில் பயணம் செய்வதற்காக வந்து திரும்பிச் சென்ற பயணிகள் அனைவரையும் இன்று மீண்டும் பயண ஏற்பாடுகளுடன் வருமாறு 'றான்' அலுவலகம் கேட்டுள்ளது.

இன்று கப்பல் பயணத்துக்கான புதிய பதிவு நடவடிக்கைகள் எவையும் இடம்பெறாது என்றும் அந்த அலுவலகம் தெரிவித்தது. (உ-3)

குடிசன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்களைத் திரட்டும் பணியிலே ஈடுபடவேண்டாம் என்று விடுதலைப் புலிகளின தமிழீழ நிர்வாக சேவையின் யாழ்.மாவட்டப் பிரிவு கேட்டிருப்பதை அடுத்தே இந்த நடவடிக்கைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

இதற்கிடையில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதில் குடாநாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த புதன்கிழமையன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேரில் சந்தித்து விளக்கியதாகவும்-

அவரது கோரிக்கையின் பேரில் வடமாகாணத்தில் மட்டும் இப்பணியை ஒத்திப் போடுவதற்கு ஜனாதிபதி கொள்கை அளவில் இணங்கினார் என்றும் -

ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.

இதேசமயம் -

ஜனாதிபதி அலுவலகம் நேற்றிரவு விடுத்த சிறிய செய்திக்குறிப்பு ஒன்றில் -

'வடக்கு - கிழக்கு குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்துவோம்'- என்று ஜனாதிபதி கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ-5-6-15-86-175)

மரண அறிவித்தல்கள்

பசுபதி சோமசுந்தரம் (P.S)

(பிரபல பழவர்த்தகர், மார்க்கற், யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட பசுபதி சோமசுந்தரம் (11-06-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தனேஸ்வரியின் அன்புக்கணவரும், காலம்சென்றவர்களான பசுபதி - இளையபிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கமலரெட்ணாவதி - சுந்தரலிங்கம், சிவராஜசிங்கம் (U.K), தர்மகுணசிங்கம் (கௌரி அழகுமாடம்), றகுலபாஸ்கரன் (U.K), சகஸ்தினாவதி (சித்திரா), லோகஜீவி (ஜீவா-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம்-கொழும்பு), சிவசக்தி (U.K), ரேணுகாகாந்தி, சிவானந்தவல்லி (U.K), பத்மநாதன் (அம்பிகை களஞ்சியம்), தவராஜசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, நல்லதம்பி, முத்துப்பிள்ளை, செல்லாச்சி, கனகசபை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், திருமதி சுரபி - ஜெயக்குமார் (ஆசிரியர்), Dr.சுதேசன் (கொழும்பு), திருமதி சொரூபி இராஜேந்திரன் (ஆஸ்திரேலியா), சிவதர்சினி, சோபன், துர்க்காதுளசி, சுஹாசினி, பிரணவன், செந்தூரன், பிரஹாசினி, றமணன், ஈஸ்வரியா, தனுஷியா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் கமலானுஜனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-06-2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

236, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
திருமதி சோ.தனேஸ்வரி
(மனைவி)

(C/17099)

திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற அதிபர்)

உசனைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (14.06.2001) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், கல்வித் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் குணசீலன் (பிரபல தாவரவியல் ஆசிரியர்), சுபசீலன் (மக்கள் வங்கி, நெல்லியடி), திருமதி வாமதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் வாமதேவன் (லண்டன்), திருமதி கு.கலாவாணி (மக்கள் வங்கி, நெல்லியடி), திருமதி சு.சொரூபா (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

விக்னேஸ்வரா வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

தகவல்:
சி.குணசீலன், சி.சுபசீலன்
(மகன்மார்)

(C/17109)

யாழ்.பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்
G.A.Q , Ist IN.COM. 2002
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம்:- 16-06-2001
சனி 1.00 p.m. (ப.நே)
புதிய பாடத்திட்டத்துக்கமைவாக ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
பின்வரும் வகுப்புகளும் நடைபெறுகின்றன.
☆ G.A.Q., 1st in Com-2001 யாழ்., பேராதனை
☆ B.A., B.COM PART - I யாழ்.
☆ B.A. FINAL யாழ்., பேராதனை
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
பொருளியற் கல்லூரி
(89006) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.